பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper


தரமான சேட்டிங்
* சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூ 2. 50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கலி 4 சிபவ ஆடு தை மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 20 (29-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 56





வண்ணமலர் மாலைகளுடன் வித்தி மீளாத் துயில் கொண்டிருக்கும் காட்சியை முதல் படத்திலும்-

அவரது இல்லத்திலிருந்து இறுதி யாத்திரை புறப்படத் தயாராகிக் கொண்டிருப்பதை இரண்டாவது படத்திலும்.

இறுதி ஊர்வலத்தின் முன்னால் தொண்டர் படையினர் அணிவகுத்து நிற்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (ஒ)

படங்கள்: ஜெயம்

## நாடாளுமன்றத் தேர்தல்.

# ராஜீவுக்கு எதிராக தமிழகத்தில் வெங்கடேஸ்

இந்திய வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலாளரான திரு எ. பி வெங்கடேஸ்வரன் தீவிர அரசியலில் ஈடுபட ஆயத்தமாகிவருகிறார்.

அடுத்து நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் போது பிரதமர் ராஜீவ்காந்தியின் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தமிழ் நாடு தேர்தல் களத்தில் அவர் குதிக்கவிருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவரான வி. பி. சிங்கின் ஜனதா (தள்) சார்பாக அவர் தமிழகத்தில் தேர்தலில் போட்டியிடுவார்.

தி. மு. க. உட்பட பல பிரபல கட்சிகள் அவருக்கு முழு அளவில் ஆதரவு வழங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளியுறவுத் துறையில் செயற்பட்டு வந்த மூத்த தமிழ் அதிகாரியான இவர் பின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வறுமை ஒழிப்புத் திட்டம்:

# 20 வீதமானோருக்கே இந்த வருடம் உதவி

## அடுத்துவரும் 4 ஆண்டுகளில் தான் எஞ்சியோருக்குக் கிடைக்கும்

— அலுவலகச் செய்தியாளர் : ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், ஜனவரி 29

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்களில் ஐந்தில் ஒரு பகுதியினருக்கே– அதாவது 20 சதவீதமானோருக்கே -- இந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் உதவி வழங்கப்படும்.

எஞ்சிய 80 சதவீதமானோருக்கும் -ஒவ்வொரு ஆண்டும் 20 வீதமானோர் என்ற கணக்கில் -அடுத்தவருடம் நான்கு ஆண்டுகளிலேயே இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் மாநாட்டில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டதாக அறியவருகிறது

ஜனாதிபதி ஆர், பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புத் திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் முழு அளவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவர்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர்.

இந்தப் பிரிவுகளுக்குள் 'வறுமையிலும் வறுமை' என்ற எல்லைக்கோட்டுக்குக் கீழ் வாழும் முதலாவது பிரிவுகுடும்பங்களின் பட்டியல் ஒன்றை பெப்ரவரி நடுப்பகுதிக்கு முன்பாகத் தயாரிக்கும்படி மாவட்ட செயலகங்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும்-

இப்படித் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் உதவித் தொகை வழங்கப்படும் என்றும் தெரியவருகிறது. (உ-5)

## முச்சந்தி முரளி



ஏழில் செவ்வாய்ப் பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு அங்கை ஏதும் வழியிருக்கோ என்டு ரஷ்யக் காரங்களைப் பார்க்கச் சொல்லவேணும் பாருங்கோ....!

## மீட்பு

கொழும்பு ஜன 29

குருநாகலையில் மறைவிடம் ஒன்றில் இருந்து ஐம்பது துட்பாக்கிகளையும், இரண்டு ரி-56 ரக ரைபிள்களையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். (உ)

# வித்தியின் இறுதிச் சடங்கில் திரளான மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன 29

முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் வித்தியானந்தனின் பூதவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தவும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ளவுமென நேற்று ஆயிரக்கணக்கானோர் தெல்லிப்பழையிலுள்ள அவரது ''தமிழகம்'' இல்லத்தில் குழுமினர்.

பேராசிரியர்கள் சமயப் பெரியார்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள். எழுத்தாளர்கள், அரச அதிகாரிகள், கல்விமான்கள், பல்கலைக் கழக அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் வித்தியின் அபிமானிகள் ஆகியோர் நேற்றுக் காலையிலிருந்தே 'தமிழகத்தில்' குழுமத் தொடங்கினர்.

காலையில் சமய கிரியைகள் நடைபெற்றன அவற்றைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. பலரும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

நண்பகல் சுமார் 1.30 மணியளவில் வித்தியின் இறுதி யாத்திரை ஆரம்பமானது.

அப்போது வித்தியின் புத்திரிகள் இருவரும் நெருங்கிய உறவினர்களும், ஏனையோரும் கண்ணீர் விட்டு கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது

இறுதி ஊர்வலம் அவரது இல்லத்திலிருந்து தெல்லிப்பழை மயானத்தை நோக்கிப் புறப்பட்டது. பாடசாலை மாணவர்களும், சாரணர்களும் அணிவகுத்துச் சென்றனர். நூற்றுக்கணக்கான மலர்வளையங்கள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

பெரும் எண்ணிக்கையானோர் இறுதி ஊர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆயிரம் தாதிகள் நியமனமாவர்

கொழும்பு, ஜன 29

மேலும் 5 ஆயிரம் தாதிகளை நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்புரையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# அரியாலைப் பகுதியில் நேற்று சூட்டுச் சம்பவம்

## நல்லூர் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம் ஜன 29

அரியாலைப் பகுதியில் நேற்றுக் காலை சுமார் 6.30 மணியளவில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

துப்பாக்கி வேட்டுக்களினால் இப்பகுதியே அதிர்ந்து எங்கும் பதற்றம் நிலவியது.

இச்சம்பவத்தின் போது இருவர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

இதில் ஒருவர் நல்லூரைச் சேர்ந்த சரவணபாலச்சந்திரன் (வயது 25).

இவர் இப்பகுதியில் சென்றுகொண்டிருக்கையில் இடையில் சிக்குண்டு காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் மரணமானார். [ஒ-10]

## மானிப்பாயிலும்

யாழ்ப்பாணம். ஜன 29

மானிப்பாய் பகுதியிலும் நேற்று நண்பகல் அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# செவ்வாய்க் கிரகத்தை எட்டிய ரஷ்ய விண்கலம்

மாஸ்கோ, ஜன 29

சோவியத் யூனியன் அனுப்பிய விண்கப்பல் ஒன்று நேற்று மாலை செவ்வாய்க் கிரகத்தை சுற்றி வலம் வர (Orbit) ஆரம்பித்தது.

ஏழு மாதங்களுக்கு முன்னர் இந்த விண்கப்பலை சோவியத் யூனியன் அனுப்பியது.

பத்துக் கோடி மைல் தூரத்தைத் தாண்டி இப்போதுதான் சோவியத் விண்கப்பல் செவ்வாய் மண்டலத்தை அடைந்துள்ளது.

செவ்வாய் மண்டலத்தில் உள்ள (Phobos) போபோஸ் சந்திரன் பற்றிய ஆராய்ச்சியில் இந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்தேர்தல் அல்ல; பொதுப் படுகொலை!

கொழும்பு ஜன 29

பொதுத் தேர்தல் அல்ல; பொதுப் படுகொலை தான் நடந்து கொண்டிருக்கிறது.

சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் சோமஸ்ர தஸநாயக்கா தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் முன்சண்டவாறு கூறியிருக்கிறார்.

இதுவரை சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் ஏழு பேரும், நூற்றுக்கு மேற்பட்ட ஆதரவாளர்களும் படுகொலைசெய்யப் பட்டனர்.

-இப்படி அந்தமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# சுவீடன் பல்கலைக்கழகத்தில் மணிமேகலை விரிவுரைகள்

## பேராசிரியர் சிவத்தம்பி ஆற்றுவார்

ஸ்டொக்கோம், ஜன 29

சுவீடனின் பழம்பெரும் பல்கலைக்கழகமான உப்சலாவில், மணிமேகலை காவியம் பற்றி விரிவுரைகள் நடக்க இருக்கின்றன.

இரண்டு மாதங்களுக்கு நடக்க இருக்கும் காவிய விரிவுரைகளை ஆற்றுவதற்கு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார். பெப்ரவரி முதற் பகுதியில் அவர் இங்கு அழைக்கப்படுவார்.

உப்சலா பல்கலைக்கழகத்தின் சமய வரலாற்றுத் துறையினரே மணிமேகலை விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

பேராசிரியர் சிவத்தம்பி கடந்த வருடம் செப்டம்பர்–அக்டோபர் மாதங்களில் ஸ்கண்டிநேவிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து தமிழ்ப்பண்பாடு பற்றிய பல விரிவுரைகளை நிகழ்த்தியிருந்தார். (அ)

## சுபநேரம்

29-01-1989
தை-16
ஞாயிற்றுக் கிழமை
சுபநேரம்:
9. 36 முதல் 11. 06 வரை
ராகுகாலம்:
05. 06 முதல் 6 36வரை
விவேகானந்தர்
குருபூசைத் தினம்

## யாழ் ஆஸ்பத்திரி வீதியில்

யாழ்ப்பாணம், ஜன 29

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று நண்பகல் வாகனப் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டன.

சுமார் 2 மணி நேரம் இந்த நிலைமை நீடித்தது.

பின்பு வழமை நிலை திரும்பியது. (இ)

# வடக்கு இளைஞரின் மனநிலை; ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு, ஜன 29

தமக்கு உண்டாக்கப்பட்டிருக்கும் உடல், உள உளைச்சல்கள் ஒழிக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்று வடபகுதி இளைஞர்கள் விரும்புகிறார்கள்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட ஓர் அறிக்கையில் வடக்கில் உள்ள இளைஞர்களின் எண்ணக் கிடக்கை எடுத்தியம்பப்பட்டுள்ளது.

வடபகுதியில் உள்ள இளைஞர்களுடன் கலந்துரையாடிய பின்னரே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் பிரஸ்தாப அறிக்கையில் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவசர கால நிலைமையை நீக்கியமை, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பகிரங்க அரசியலுக்கு வர முடியாமல் தடுக்கும் காரணிகள், அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டியதன் அவசியம், பொதுத் தேர்தல் வரை அமைதிப் படையின் தேடுதல் மற்றும் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல் போன்ற அம்சங்கள், ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரஸ்தாப அறிக்கையில் தொடப்பட்டிருக்கின்றன. (அ-3)

# தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச சுயேச்சைக் குழு?

கொழும்பு, ஜன 29

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச சுயேச்சைக் குழு ஒன்றை அழைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படுகிறது.

இத்தகவலை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலை அவதானிக்கு சர்வ

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Avery 5 அந்தர் Plat Form தராசு உடன் விற்பனைக்குண்டு. Made in England தொடர்பு 195, 3rd Cross Street, யாழ்ப்பாணம். (C/1352)

பாவித்த தளபாடங்கள், கட்டில், கதிரைகள், மேசை, அலுமாரி, Baby cot, Show case, கண்ணாடிமேசை, Iron Box, Hot Plate, சிங்கர் மெசின், மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. மாதா (F)பிளோரிஸ்ட் 634, ஆஸ்பத்திரி வீதி, [காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக] யாழ்ப்பாணம். [9244]

கதிரைகள், கட்டில்கள், மேசைகள், Love Birds கூடு, பாவித்த நிலை, கதவு, கூரைமரங்கள் மற்றும் பலவீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு 81, K. K. S வீதி, கொக்குவில். [9073]

பாவித்த டிஸ்பன்சரி தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி கட்டில் மெத்தைகள், ஹோல் செற் சாப்பாட்டு மேசை, Cake mixer Pyrex வகை விருந்தை செற்றி மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு Sivajee, 19, Brown Road, யாழ்ப்பாணம். [9121]

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1341)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் 2ஆந் திகதி வியாழக்கிழமையும், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9238)

Nallur Farm Centre- Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1340)

### Uplands Farm

இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (Dekalb) இன பிறவுண் சேவல் குஞ்சு [01 02-89] புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4.50 கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, சந்நிதையா லேன், கன்னாகம் [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [9125]

### கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (8755)

### கோழி விற்பனைக்கு

முட்டை இடும் பராயத்தில் உள்ள 5 மாத Hyline கறுப்பு, லோமான் சிவப்பு கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (9076)

### வீடு வளவு விற்பனைக்கு

சூராவத்தை சுன்னாகத்தில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடுடன் கூடிய 3 பரப்புக் காணியும், இதிலிருந்து 100யார் இடைவெளியில் 6 3/4 பரப்பு தோட்டம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணியும் உண்டு. உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, "கோகிலா வாசம்" சூராவத்தை, சுன்னாகம். (9115)

### ஒமேகா

குறைந்த செலவில் குளிர்சாதனப் பெட்டிகள் (Gas Filling உட்பட) மோட்டர் மின்விசிறி ரான்ஸ்போமர் விருடைசர் ஏனைய மின் உபகரணங்கள் உத்தரவாதத்துடன் திருத்தியும் றீவைண்டிங் செய்தும் கொடுக்கப்படும். வயறிங்வேலைகள், பைப் வேலைகளும் செய்யப்படும் Omega, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (ஈழநாட்டிற்கு எதிரில்). (9241)

### கோழித்தீன்

"மல்டி றேட்ஸ்" இல. 234/C, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக) உங்களுக்குத் தேவையான பிறிமா அத்துடன் கோப்பறேஷன் கோழித்தீன் வகைகள் சகலவற்றுடன் தேங்காய்ப் பிண்ணாக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம், (9104)

### NEW CITY TRADERS

சகல விதமான T. V. டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர் பைப் செற், T D K, Maxell Audio Video கசற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/1522)

### வாடகைக்கு

நல்லூர் மார்க்கட் சூருகாலையில் பருத்தித்துறை பிரதான வீதியில் கடை, தளபாடங்களுடன் கொமிசன் அடிப்படையில் வாடகைக்கு உண்டு. தொடர்பு 94, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு நல்லூர், யாழ்ப்பாணம். [9120]

### தவறிவிட்டது

R. துரைராஜா ஆகிய எனது அடையாள அட்டை இல. 450462217 V பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [9250]

## தேவை

குருகுலம், விஸ்வகுலம் இனத்தைச்சேர்ந்த மணமக்கள் (ஆண், பெண்) இருபாலாரும் உடன் தேவை. இன்னும் எம்மிடம் சகல சாதி சமயத்திலும், தரத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். விவரங்களுக்கு: A B,C, D,E விவாகப்பொருத்துனர், இல: 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (9242)

சில மாதங்களுக்கு மட்டும் பகுதி நேர தமிழ், ஆங்கில பெண் தட்டெழுத்தாளர் தேவை. வேலை செய்யக் கூடிய நாட்கள் வசதியான நேரம், எதிர்பார்க்கப்படும் சம்பளம் ஆகிய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 439 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (9246)

பாடல் பதிவு செய்வதில் தேர்ச்சி உள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும். 'ஸ்கை ரோஸ்' இல 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [9249]

நல்ல அனுபவம் வாய்ந்த லேத் மெஷின் இயக்குநர் தேவை. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். உதயன் கடைச்சல் தொழிற்சாலை கண்டி வீதி, கிளிநொச்சி (இலங்கை வங்கி முன்பாக) [9123]

## வகுப்புகள்

G. S. Q Maths, Bio, Home Science (Diploma) வகுப்புக்கள் மாசி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. 31-01-1989ற்கு முன்பு விண்ணப்பிக்கவும். அதிபர் உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [9122]

### ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கிலம் ஆரம்பத்திலிருந்து எழுத வாசிக்க பேச Spoken A/L வரையான துரித வகுப்புக்கள் தினசரி காலை, மாலை கனகசபை, 8, ஆறும் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [9235]

### A/L 90 இரசாயனம்

108 Brown Road அசேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் [1-2-89] புதன் 6,30 a m [திங்கள், புதன், வெள்ளி, 6-30 a.m]. [9245]

### German Language

மேற்கு ஜேர்மனியில் மேற்படிப்புகளை தொடர்வதற்கும் ஜேர்மன் கலாசார நிலையத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளில் [Elemantary I & II] தோற்றுவதற்கும் 01-02-89 இல் ஆரம்பமாகின்றன. தகுதி G C E. A/L நான்கு பாடமும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தொடர்பு, Mr. Sabanayagam "Rudi Cot" 33, Kandy Rd Jaffna [C-1394]

### ஐஸ்கட்டிகள்

சகல தேவைகளுக்குமான ஐஸ்கட்டிகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்; 56, 1ம் குறுக்குத் தெரு, பள்ளிவாசல் சந்தி, யாழ்ப்பாணம். (9059)

### Bride Wanted

Jaffna Vellala Hindu parents looking for their doctor son aged 27, working in U. K, a suitable bride with Australian, American, or British citizenship. Give all details with Horoscope: No. 4 C/o Uthayan [9301]

## சேவை

கோயில் மணிகள் நிறை 100ரு, 50ரு, 20ரு எடையுள்ள மற்றும் கோயில்களுக்கு தேவையான தூண்டாமணி, குத்துவிளக்குகள் மற்றும் தேவையான பாத்திரங்கள் யாவும் மிகக் குறைந்த விலையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். P. சிங்கம் இல 183 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். வீரேசன் சந்திக்கு அருகாமை [9114]

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சாரநிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

### தபால் மூலம் ஆங்கிலம்

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பினைத் தேடுவோருக்கும் ஆங்கிலத்தில் பரீட்சைகள், பயிற்சிகள் செய்வோருக்கும் இன்றியமையாத மொழியான ஆங்கிலமொழி ஆரம்பத்திலிருந்து முழு விளக்கங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படும். விபரங்களுக்கு சுயவிலாசமிட்டு முத்திரை ஒட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும் 60/3 பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம் (9247)

### தவறிவிட்டது

மகளிர் ரேமர் கைக்கடிகாரம் றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதி, ஆஸ்பத்திரி வீதிக்கிடையில் 25-01-89 இல் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 22, கச்சேரி ஒழுங்கை, சுண்டுக்குளி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (9108)

## தேவை

1. கிறைண்டரில் (Grinder) வேலை செய்வதற்கும்
2. வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகளும் தேவை

**S. சுப்பிரமணியம் & கொம்பனி**

53, K K S வீதி யாழ்ப்பாணம். — 34, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [C-1398]

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



**சி. விஷ்ணுமூர்த்தி (கிளி)**

தோற்றம்: 11-08-1964 — மறைவு: 20-12-1988

அன்புச் சுடரே!

குடும்பத்தின் முதல் விளக்காய் குல விளக்காய்; உன் சுடரால், அனைவரையும் ஒளிவீசச் செய்வாயென பேருவகை கொண்டிருந்தோமே!

— ஆனால்;
எம் எண்ணத்தை இருளாக்கி,
இதயத்தைப் புண்ணாக்கி -
காலனவன் கரம் பற்றிக்
காற்றோடு கலந்தனையோ?
என்ன என்ன எம் இதயம்
இடி விழுந்து சிதறுதையோ!
எப்பிறப்பில் இனி நாங்கள்
உன் முகத்தைக் காண்பதையா?
உன் பிரிவால் வாடி நிற்கும்,

அன்புப் பெற்றோர், மனைவியர், மக்கள், சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், மருமக்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (9126)

## சினிமா 'காபன்ஸ்' "CARBONS" விற்பனைக்கு

சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாரின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்!!

நியூ சாந்தி சினிமா (யாழ் நகர்)
11, இராமையாச் செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 7 x 14 | Positive — Seagull | 50 Pieces | — 510-00 |
| (2) | 6 x 9 | Negative — " | 50 " | — 270-00 |
| (3) | 7 x 14 | Positive — Beagon | 50 " | — 650-00 |
| (4) | 6 x 9 | Negative — Beagon | 50 " | — 325 00 |
| (5) | 9 x 14 | Positive — Seagull | 50 " | — 750-00 |
| (6) | 8 x 9 | Negative — " | 50 " | — 350-00 |

[8909]

## லிபியாவில் வேலைவாய்ப்பு

| | தொழில் | | தேவைப்படும் தொகை | சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. | மொபைல் கிறேன் ஒப்பறேட்டர் (Mobile Crane) | | 02 | ரூ 10,000.00 |
| 2. | ராக்ஸ்கவேற்றர்/லோட்டர் [Traxcavator/Loader] | " | 03 | " |
| 3. | ஸ்கிறேப்பர் [Scraper] | " | 02 | " |
| 4. | வீல் லோடர் [Wheel Loader] | " | 03 | " |
| 5. | ஜே. சி. பி கேஸ்டிக்கர்/லோடர் [J. C. B /Casedigger/Loader] | " | 04 | " |
| | | " | 01 | " |
| 6. | கிறேடர் [Grader] | " | 01 | " |
| 7. | புல்டோசர் [Bulldozer] | " | 02 | " |
| 8. | மேல் சொன்ன வாகனங்களுக்கு ஓட்டோ எலெக்றிக் வேலை தெரிந்தவர்கள் | | 02 | ரூ. 8000.00 |

1½ மாதத்துக்குள் பிரயாணம் செய்யலாம்.
வயது: 25 - 45, உணவு விடுதி வசதிகள்,
மெடிக்கல், இருப்பிடம் இலவசம். முற்பணம் இல்லை.

பாஸ்போட், 4 படங்கள், H/V லைசென்ஸ், தொழில் சான்றிதழ்களுடன் உடன் நேரில் வரவும்.

கொழும்பு முகவரி:

**இந்திராணி ஏஜென்சி**
18½ முதலிகே மாவத்தை,
கோட்டை (FORT)

**இந்திராணி ஏஜென்சி**
யாழ் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(9002)

## அஞ்சலி

**சண்முகம் சண்முகலிங்கம்**
(ஆசிரியர், யாழ்: இந்துக்கல்லூரி)

கடமை நேரத்தில் அகால மரணமடைந்த யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் சண்முகம் சண்முகலிங்கம் அவர்களுக்கு எமது அஞ்சலி

யாழ். இந்துக்கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்: இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்;

1989 01-29 (C 1402)

## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

சிரஞ்சிவி — நளினி
**இடி முழக்கம்**
★★★
பிரபு — அமலா
**நாளை மனிதன்**

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1159)

## முதலாண்டு நினைவஞ்சலி



**செல்வி பா. ஜெசிந்தா**

மலர்வு: 14 05-1982 — உதிர்வு: 29-01-1988

நீண்ட பயணம் தான்
நித்திலம் நீ செய்யவென்று
வேண்டித் தொழுது நின்றோம்
வந்ததுவோ கொடும் விதியும்
ஆண்டொன்று சென்றதுவோ
ஆரமுதே உனைப்பிரிந்து
ஆண்டு நூறு சென்றாலும்
அஞ்சுகமே உனை மறவோம்.

வி. பாலகிருஷ்ணன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார், உற்றார், உறவினர்கள்.
(9124)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் S. K. செல்லத்துரை**
(பிரபல வர்த்தகர், மன்னார்)

அன்புடையீர்,

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

அத்துடன் 30-1-89 திங்கட்கிழமையன்று அந்தியேட்டிக்கிரியை நடைபெறும். 1-2-89 புதன்கிழமை அன்று நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்திற் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி செல்லத்துரையும் குடும்பத்தினரும்.

சிறீபேக்கறி, மன்னார். [8915]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTOR RE-WINDING COURSE

THEORY - 8 WEEKS, PRACTICALS - 8 WEEKS: மோட்டர்கள், ராண்ஸ்போமர்கள், மின் விசிறிகள், மின் உபகரணங்கள் பிறர் உதவியின்றி நீங்களாகவே றீவைண்டிங் செய்ய பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சி ஆரம்பம்: 01.02.1989

முழுக்கட்டணம்: ரூபா 650/-

**OMEGA,** மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஈழ நாட்டிற்கு எதிரில்)

(9293)



வலி - கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

## பதிவு செய்தலும், கூறுவிலை வழங்கி பொருள் வழங்கலும்

எமது சங்கத்திற்குத் தேவையான நல்ல தரமான குத்தரிசி குத்துப் பச்சை-தீட்டலும், உடையலும். நல்லெண்ணெய், ஏனைய நுகர்ச்சி மளிகைப் பொருட்கள், புடவை வகைகள், மாதிரி விற்பனை நிலையத்தில் விற்பனைசெய்யக்கூடிய விநோதமான பொருட்கள் என்பனவற்றை வழங்கக்கூடியவர்களிடம் இருந்து வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் பொருள் கொள்வனவுகளை நிர்ணயிப்பதற்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

எனவே மேற்குறித்த பொருட்களை வழங்கக்கூடிய விநியோகஸ்தர்கள் மேற்படி சங்கத்தின் தலைமைக் கந்தோரில் உடனடியாகப் பதிவு செய்து, கூறுவிலைகளை வாரந்தோறும் தபால் மூலமோ, நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

— பொது முகாமையாளர்

நீர்வேலி, 1989-01-23

[C-1157]



## அக்குபங்சர் டிப்ளோமா

வைத்தியர்களுக்கும், வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குமான அக்குபங்சர் கல்விப் போதனையும், வைத்தியசாலையில் செயல்முறைப் பயிற்சியும், பரீட்சையும் தராதரப் பத்திரமும் வழங்கப்படும்.

விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்பவேண்டிய முகவரி:

அமைப்பாளர்

**ஸ்ரீ லங்கா அங்குபங்சர் சங்கம்**

வயாவிளான்.

(8903)



## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

156/3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

# G.A.Q., B.A.

வகுப்புகள்

பொருளியல்: வரதராஜன்
தமிழ்: குழந்தைவேல்
இந்துநாகரிகம்: காரை சுந்தரம்பிள்ளை
மெய்யியல்: சந்திரராஜா
அரசறிவியல்: தமீம்

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வியில் தனித்துவம் வாய்ந்த இவ் விரிவுரையாளர் குழு யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பர்.

**ஆரம்பம்: 4-2-89 சனி**

2-00 p. m.

பல்கலைக்கழகப் பதிவுகள் அனைத்தும் எம்மால் செய்து தரப்படும்.

விபரங்கட்கு:

**BECON**

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(9283)


## நோயினால் மாடுகள் மரணம்

சரவெட்டி, ஜன 29

சரவெட்டி மேற்குப் பகுதியில் நோய்காரணமாக மூன்று மாடுகள் இறந்தன.

இதனை அடுத்து சரவெட்டி மூவ் கொடை முருகனாலயத்தில் 100 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அன்றையதினம் வெல்லன் விநாயகர் ஆலயத்திலும் தடுப்பூசி போடப்பட்டது. (இ-70)


உ

அம்பாள் துணை

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில்

மேற்குறித்த கோயில் விடயமாக 14-1-89 இல் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைக் குறித்து சில ஐயப்பாடுகள் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. 21-12-88 இல் நடந்த எங்கள் விசாரணையில் (சோ. அ) முறைப்பாட்டுக்காரரும் பரிபாலனசபைப் பிரதிநிதிகளும் ஏகமனதாக ஒப்புக்கொண்டபடி ஓர் (சோ. அ) வழிபடுவோர் பொதுக் கூட்டத்தைக் கூடி புதிய பரிபாலனசபையைத் தெரியும் நோக்கத்துடன் அப்பொதுச் சபைக்கு அங்கத்தவரைச் சேர்ப்பதற்காகவே இவ் வழக்கில் சம்பந்தப்படாத வழிபடுவோர் சங்க அமைப்பின் உதவி நாடப்பட்டது. தற்பொழுது நடந்துவரும் வழிபடுவோர் சங்கம் அதன் மூன்று வருடகாலம் முடியும்வரைக்கும் அதன் யாப்புக்கமைய இயங்கிவரும். ஆகவே புதிய பரிபாலன சபையைத் தெரிவு செய்வதற்கு கூட்டப்பட இருக்கும் பொதுச்சபையில் அங்கத்தவராகச் சேர விரும்புவோர் உரிய அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவ அட்டையைப் பெறும்படி வேண்டப்படுகின்றனர். பொதுக் கூட்டம் நடாத்தப்பட இருக்கும் திகதி நிபந்தனைகள் முதலிய விவரம் பின் அறிவிக்கப்படும்.

ஆணையாளர்கள்;

சோ. அருணாசலம், (தலைவர்)
கு. கிட்டினர்,
செ. நடராசா.

யோகஸ்தன், அளவெட்டி தெற்கு, அளவெட்டி
25-1-1989

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய விசாரணைக் குழு

(8902)


## நல்லை ஆதீன ஸ்வாமிகளின் அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம், ஜன 29

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மறைவு குறித்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள் விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மறைவு எவ் வகையாலும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அவர் மாணவர் நெஞ்சிலும், அவரை மதிப்போர் உள்ளங்களிலும் நிலையானதோர் அன்பு அரண் ஆனார்.

அவரின் மூச்சுப் பேச்செல்லாம் நற்றமிழே! பண்டைத் தமிழர் பாதுகாத்துப் பேணிவளர்த்த இயல், இசை, நாடக மரபுகள் தளர் நடையுற்ற வேளை இதயம் நொந்து அவற்றைப் புது மெருகூட்டி வளரச்செய்த பெருமை அவரையே சாரும்.

மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற பெரியார் வரிசையில் வைத்து நினைவு கூரப்பட வேண்டியவர் வித்தி.

அவர்களின் ஜீவாத்மா எல்லாம்வல்ல இறைவன் பொற்பாதம்சார்ந்து நிரதிசய, நித்தியானந்த சாந்தினில் எய்தவேண்டுமென உளமாரப்பிரார்த்திப்போமாக! (உ-ஒ)


## BluePrint Service In Jaffna

- ✶ வீடு, கட்டட வரைபடம் [House & Building Plan] வரைந்து கொள்ளவும்.
- ✶ சகல வசதிகளையும்கொண்ட நவீனவீடுகளையும், கட்டடங்களையும் உங்கள்மனத் திருப்திக்கேற்ப நிர்மாணித்துக் கொள்ளவும்.
- ✶ உங்கள் விருப்பத்திற்கான வரைபடப் பிரதிகளை (Plan) எங்கள் அலுவலகத்தில் வந்து தெரிவு செய்துகொள்ளவும்.
- ★ இத்துடன் மதிப்பீடு, கணியங்களும் (Estimate & Quantity) செய்து கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவும்:

**A. Murugesampillai &Co**

**Engineers & Contractors**
1 st Floor Lalitha Building,
213, Kasthuriar Road,
Jaffna.

(9103)



# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### நம்பிக்கையுடன் சேமிக்க

# "ஷப்ரு" வை நாடுங்கள்

### நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே

பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B, Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி,
(B. A. (Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன 29

வட இலங்கை சங்கீத சபையினரால் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்பட உள்ள சங்கீத, நடன நாடக, மிருதங்கப் பண்ணிசைப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் மேலதிக கட்டணத்துடன் இம்மாதம் 31 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சைவ சமயப் பரீட்சை

மானிப்பாய் ஜன 29

கொழும்பு விவேகானந்த சபையினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சை பெப்ரவரி மாதம் ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது. [ச]

## நெடுந்தீவு மக்களுக்கு இன்னும் இல்லை

நெடுந்தீவு ஜன 29

மீளக் குடியமர்த்தலுக்கான நிவாரண உதவிகள் நெடுந்தீவு மக்களுக்கு இன்னும் வழங்கப்படாதது குறித்துப் பொது மக்கள் இடையே சசப்புணர்வு நிலவுகின்றது (இ-111)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி, ஜன 29

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் மகாசபைப் பொதுக் கூட்டம் இன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது. (க-160)

# தொற்றுநோய் தடுப்பு வேலைகளை முழுமையாக அமுல் நடத்த முடியாத நிலை

## கருத்தரங்கில் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன, 29

நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் வைத்தியசாலைகள் செயற்படுகின்றன ஆனால் நோய்த்தடுப்பு வேலைகளையும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் உள்ளது.

யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மேற்கண்டவாறு கூறினர்

சுகாதாரக் கவனிப்பு நடவடிக்கைக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் எவ். ஆர். எஸ் எஸ். காரியாலய மண்டபத்தில் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நடைபெற்றது.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார சேவையாளர் பற்றாக்குறை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். யாழ் மாவட்டத்தில் 10 லட்சம் மக்களுக்கு சேவை அளிக்க வேண்டும் இதற்காக சுகாதாரப் பரிசோதகர்கள் 120 பேர் தேவை ஆனல் உள்ளது 34.

மருத்துவ மாதர்கள் 300 பேர் தேவை ஆனல் உள்ளது 100.

சுகாதார வைத்திய அதிகாரிகள் 8 பேர் ஆனல் உள்ளது 6.

சுகாதார கல்வி அதிகாரி 8 பேர் தேவை. ஆனல் உள்ளது 1.

சுகாதார தாதிமார் 8 பேர் தேவை ஆனல் உள்ளது 1.

பாடசாலை பற்சிகிச்சையாளர் 30 பேர் தேவை. ஆனல் உள்ளது 6.

சுகாதார சேவையாளரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயல் பட வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

யாழ் மாவட்டத் தொற்று நோய்த்தடுப்பு நிபுணர் டாக்டர் சா. விஜயராசா பேசுகையில்,

சுகாதார சேவைத் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் சரியான முறையில் திட்டமிட்டுச் செயற்படுத்தப் பட வேண்டும்

யாழ் பகுதியில் 50% நோய்கள் தொற்றுந் தன்மை உள்ளன.

பின்வரும் நிலை நோய்கள் முன்னிலை வகிக்கின்றன.

1. வயிற்றோட்ட நோய்களும் குடல் வியாதிகளும்.
2. சொறி சிரங்கு
3. போஷாக்கு குறைபாடு நோய்கள்.
4. மலேரியா.
5. இருதய நோய்கள்; சலரோகம்.
6. எயிட்ஸ் ஆகியன

மரணவீதத்தில் இருதய நோய்கள் தற்கொலைகள் கிருமிநாசினி மரணங்கள் அகால மரணங்கள், வயிற்றோட்ட நோய்கள் முக்கிய மானவை.

அசுத்தமான சுற்றுடல், சூழ்நிலை காரணமாகவும், மக்கள் மத்தியில் போதிய சுகாதாரக் கல்வி அறிவில்லாததாலும், வறுமை, போஷாக்கின்மை காரணமாகவும் வயிற்றோட்ட நோய்கள் ஏற்படுகின்றன.

இலங்கையில் 75% வீடுகளுக்கு மலகூட வசதி உண்டு. யாழ் பகுதியில் 50% மான வீடுகளுக்கு மாத்திரம் இவ்வசதி உண்டு. சில கிராமங்களில் 10% மும் இல்லை. யாழ்நகரத்திற்கு ஒரு சாக்கடை (கழிவு) நீர்த் திட்டமில்லை. யாழ் பகுதியில் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இரு முறை வயிற்றோட்ட நோய்க்கு ஆளாகின்றனர்.

போஷாக்கின்மை, வயிற்றோட்டம், அசுத்தமான சுற்றுடல், சூழல் ஆகியன ஒன்றோடொன்று தொடர்புடையன.

சொறி சிரங்கு நீக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியுள்ளன. எனினும் யாழ் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் இன்னும் சிரங்கு காணப்படுகின்றது. யாழ் வைத்தியசாலைக்கு வரும் காய்ச்சல் நோயாளர் அநேகருக்கு மலேரியா என அறியப்படுகிறது.

மரண வீதத்தில் இதய நோய் முதலிடத்தையும், இறப்பில் 10% யும் பெறுகிறது 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் மரணம் யாழ்ப்பாணத்தில் முதலிடத்தைப் பெறுகின்றது

பாடசாலை மட்டத்தில் இருந்தே இருதயநோய்கள், சலரோகம் பற்றிய சுகாதாரக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

இப்படிக் கூறினர்.

யாழ். பகுதி தாய் சேய்நல வைத்திய அதிகாரி டாக்டர் ஜி பொன்னம்பலம் தமது உரையில், தடை மருந்துகள் கொடுக்கப்படவேண்டும் என்பதைத் தாய்மார்கள் உணர்ந்துள்ளார்கள். ஆனல் சின்னமுத்து தடைமருந்து கொடுப்பது பற்றி அதிக கவனமெடுப்பதில்லை.

1988 இல் 43 தாய்மார் பிரசவத்தின்போது அதி குருதிப்பெருக்காலும், இருதய இயங்காமையாலும் மரணமடைந்துள்ளனர். இரத்தச் சோகையும், போஷாக்கின்மையும் இதற்கு முக்கியகாரணங்கள். தாய்மாருக்குக் கொடுக்கும் விற்றமின், கல்சியம், இரும்புச்சத்துக் குளிசைகளை முழுமையாகத் தாய்மார் பாவிப்பது இல்லை. அவர்களுக்குப் போதிய சுகாதாரக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

யாழ் மாவட்ட பற்சிகிச்சைக்குப் பொறுப்பான டாக்டர் கிருஷ்ணராசா தமது உரையில்

பொது நிறுவனங்கள் தகுதி வாய்ந்தோரைத் தெரிவு செய்து அனுப்பினல் அவர்கட்கு பற்சிகிச்சை அளிக்கலாம். பாடசாலை மாணவர்கட்கு பாதுகாப்பு பற்றி போதிய சுகாதாரக்கல்வி அளிக்க வேண்டும். இவ்வாறு கூறினர், (இ 18)

## எழுத்தாணியால் சுவடியில் எழுதும் முறைக்கு புத்துயிர்

கொழும்பு, ஜன 29

எழுத்தாணி பிடித்து ஓலைச் சுவடிகளில் எழுதும் முறையைப் பாதுகாக்க கலாசார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து உள்ளது.

மாவட்டக் கச்சேரிகளில் உள்ள கலாசாரப் பிரிவுகளுக்கும், பிரதேச உதவி அரச அதிபர் அலுவலகங்களில் பணிபுரியும் கலாசார அதிகாரிகளுக்கும் இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை கலாசார அமைச்சு அனுப்பி வைத்து உள்ளது.

பாரம்பரியமான ஓலைச் சுவடிகளில் எழுதும் முறைக்கு மீண்டும் புத்துயிர் வழங்க அமைச்சு இதன்மூலம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி பிடித்து எழுதுபவர்கள் பற்றி விரிவான ஆய்வு ஒன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி இந்த அதிகாரிகள் கோரப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் கொண்ட அட்டவணை ஒன்று தயாரிக்கப்படும் தேவைப்படும்போது அவர்களின் சேவையை அரசு பெறும்.

இந்த எழுத்து முறையை இளஞ்சந்ததியினருக்கு போதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு அறிவித்திருக்கிறது. (உ-எ)

## மொட்டைத் தண்டனை!

அச்சுவேலி, ஜன 29

அச்சுவேலி பன்நிலையத்தில் சிறுமி ஒருத்தி உட்பட நான்கு பேர் தலைமயிர் மொட்டையடிக்கப்பட்டு பகல் நேரம் இருத்தி வைக்கப் பட்டிருந்தனர்.

களவு, பிக்பொக்கெட் முடிச்சுமாறல் ஆகிய செயல்களைத் தொடர்ச்சியாக செய்து வந்ததாக கூறி கடந்த புதன்கிழமை தலை மொட்டையடிக்கப் பட்டு நான்கு பேரும் வரிசையாக இருக்க வைக்கப்பட்டிருந்தனர்.

நால்வரில் ஒருவர் 45 வயதானவர் அடுத்த இருவரும் 14 வயது இளைஞர்கள் நான்காவது நபர் 12 வயதுச்சிறுமி ஆவார் (அ-11)

## 83 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரிகையும்



ஸ்ரீமான் கந்தவனம் கனகசிங்கம் அவர்கள்

(யாழ்ப்பாணம் அரவிந்தன் ஸ்தாபன உரிமையாளர்)

மின்னல்: 20 02-1946 இடி: 07-11-1988

இன்று நாங்கள் உமது ஞாபகத்தை மீட்டிப் பார்க்கவில்லை; ஏனெனில் எங்கள் மனங்களில் நீர் மனனஞ் செய்யப்பட்டுள்ளீர் எங்கள் உறவே எம்மால் அழ முடியவில்லை ஏன் உமது இழப்பால் எங்கள் இதயங்கள் கல்லாகி விட்டன. ஆனல் நீர் உமது மண்ணை நேசித்த போது நிர்ப்பந்திக்கப்பட்ட மரணம் உம்மை நேசித்தது தான் எம்மால் ஜீரணிக்க முடியாது ஐயா நீர் இல்லை என்பது கசப்பான உண்மை தான் ஆனல் நீர் இருக்கிறீர் என்பது எமக்குள் ஓர் பொய்யான பிரமை எம்மையெலாம் எம்முயிர் உள்ளவரை வாட்டுமையா! எங்கள் இதயங்களில் என்றும் உமைச் சுமக்கும்

மனைவி, பிள்ளைகள்.

,, இரத்தின பூபதி''
அல்வாய் தெற்கு,
வதிரி' (9109)

# மாணவர்களின் வாழ்க்கையை வளம்படுத்த வாழ்க்கைத்திறன் கல்வி அவசியம்

யாழ்ப்பாணம், ஜன 29

''மாணவர்களுக்கு தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தமது ஆற்றல் அறிவு மூலம் வெளிப்படுத்த வாழ்க்கைத் திறன் கல்வி உதவுகிறது. இக்கல்விநெறியை 7ஆம் 8ஆம் ஆண்டு மாணவர்களுக்குக் கற்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இக் கல்வி நெறியை ஒவ்வொரு மாணவரும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப் பட்ட வாழ்க்கைத் திறன் கல்வி நெறியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இக் கல்லூரியின் அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

கல்லூரியின் உப-அதிபர் திரு ஆர். மகேந்திரன் பேசுகையில் வாழ்க்கைத் திறன் கல்வி மூலம் மாணவர்கள் தமது வாழ்க்கையை வளம்படுத்த பெரும் வாய்ப்பு உண்டு.

மகாத்மா காந்தி ராட்டையில் உருவாக்கிய நூலினுல் நெய்த கதர் ஆடை அணிந்தார். ராஜாஜியும் சுய உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என ஆசைப் பட்டார். ஆனல் வாழ்க்கைத் திறன் கல்வி இந்தியாவில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

எமது நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமே''

இப்படி அவர் கூறினர்.

வாழ்க்கைத் திறன் கல்விப் பொறுப்பாசிரியர் திரு க நரேந்திரன் நன்றியுரை வழங்கினர் (ச)

# 7,700 சுதேச வைத்தியருக்கு பேன்ஷன் வழங்கத் திட்டம்

கொழும்பு ஜன 29

சுதேசிய வைத்தியர்களுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்துவது என்று அமைச்சரவை தீர்மானித்தது.

இதன் மூலம் சுமார் 7,700 சுதேச வைத்தியர் நன்மை அடைவர்.

25 வயதுக்கு மேற்பட்ட சுதேச வைத்தியர்கள் இத் திட்டத்தில் சேரலாம்.

பென்ஷன் 60 வயதுக்கு பின் கிடைக்கும்.

இறந்தால் அவர்களின் உரித்துக்காரர்களுக்கு மரண நன்கொடை வழங்கப்படும்.

இப்படி அமைச்சரவைத் தீர்மானம். கூறுகிறது. (இ-எ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஜன 29

பருத்தித்துறை பிரதேச உதை பந்தாட்ட லீக் சழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ச-10)

# சுகாதாரப் பழக்கங்களை மக்கள் மேற்கொள்ள வேண்டும்

அச்சுவேலி ஜன. 29

எமது பகுதியில் காணப்படும் நோய்களில் 60 சதவீதமான நோய்கள் சுகாதார விதிகளையும் பழக்கவழக்கங்களையும் கைக்கொள்ளாததினுல் ஏற்படுகின்றன மக்கள் சுகாதார விதிகளையும் பழக்கவழக்கங்களையும் கைக்கொள்வதின் மூலம் இந்த நோய்களைத் தடுக்கமுடியும்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய விடுதி கருத்தரங்குமண்டபத்தில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியப் பிரிவின் பொதுஸ்தாபனங்கள், ஆரம்ப சுகாதாரநிலைய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட சுகாதார கலந்துரையாடலுக்கு தலைமைவகித்து உரையாற்றிய போது தெல்லிப்பழை மாவட்ட சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்,

சிலபகுதியில் மலசலகூடங்கள் கட்டாயப்படுத்தி பொதுஸ்தாபனங்களினுல் அமைத்துக் கொடுக்கப்பட்டன அவை உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் மாட்டுத்தொழுவங்களாகவும் விறகு சுழிவுப் பொருள்கள் போடும் இடங்களாகவும் பயன்படுத்துவதை நேரில் பார்க்க முடிகிறது.

மலசலகூடம் இருந்தும் மக்கள் வெளியிடங்களில் மலசலம் கழிக்கின்றனர். என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி திரு. கே. வைத்தீஸ்வரன், டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியம், திருமதி பரராசசிங்கம், திரு மகாதேவன் உட்பட பலர் உரையாற்றினர். (க-11)

## பரீட்சை சித்தி

யாழ்ப்பாணம் ஜன 29

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் நுணுவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலிருந்து ஆண்டு 5 இல் மூன்று மாணவர்களும் ஆண்டு 6 இல் ஒரு மாணவியும் சித்தியடைந்துள்ளனர். ஒரு மாணவன் யாழ் மாவட்டத்தில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 36 ஆம் நாள் நினைவஞ்சலி



சந்தை வீதி, இமையாணன், உடுப்பிட்டி

**Mr. G. S. கந்தசாமி**

(முன்னுள் கொழும்பு, யாழ்ப்பாணம் மாநகரசபைகளில் கடமையாற்றியவரும், முன்னுள் வல்வெட்டித்துறை நகரசபை ஆணையாளருமாவார்)

தோற்றம்: 21- 05- 1924 மறைவு: 25 12- 1988

திதி: 29 - 01- 1989 ஞாயிற்றுக்கிழமை (இன்று)

எங்கள் குடும்பத்தின் திருவிளக்காய் எமக்கெல்லாம் ஒளிவீசி எம்மை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வமே! உங்கள் பிரிவால் தினமும் வாடுகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பெருமக்கள், உறவினர்கள், மற்றும் நண்பர்கள்.

சந்தை வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி. (C/ 1397)

# தனியார் மருத்துவக்கல்லூரி குறித்து அமைச்சர் கருத்து

கொழும்பு, ஜன 29

வடகொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரியை களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க அரசு தீர்மானித்தால், யாழ்ப்பாணத்தில் உள்ள வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியை கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பேன்.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து முன்கண்டவாறு தெரிவித்தார்.

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் வளர்ச்சி, செயல் திட்டம், எதிர்கால நடவடிக்கைகள் ஆகியவை பற்றி மாணவர் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று கல்லூரி ஆளுநர் சபை பிரதிநிதி டாக்டர் ஏ. ஜே. சி. சேவியர் தலைமையில் அமைச்சர் அத்தப்பத்துவை கொழும்பில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியது.

அப்போதே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்

வட கொழும்பு தனியார் மருத்துவ கல்லூரியை அரசு தேசியமயமாக்குவதானுல் வட இலங்கைத் தனியார் மருத்துவக் கல்லூரியையும் தேசியமய பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப் பட்டதை அமைச்சர் [illegible] தெரிவிக்கப்பட்டது (உ-எ)

# கலைஞருக்கு அர்ப்பணிப்பு சிந்தை தேவை

## கலாசார நிகழ்ச்சியில் உரை

யாழ்ப்பாணம், ஜன, 29

தமிழகத்தில் போன்று எம்நாட்டிலே கர்நாடக இசை, பரதநாட்டியம் போன்ற கலைகள் நன்கு வளராததற்குக் காரணம், கலைஞர்கள் பெரும்பாலும் கலைகளைத் தொழிலுக்காகவோ. சமூக அந்தஸ்துக்காகவோ கற்பதே ஆகும். இறைபக்தியும், கலைகளுக்கென்றே தம்மை அர்ப்பணிக்கும் மனோபாவமும் கலைஞருக்கு அவசியமாகும்.

திருநெல்வேலியிலுள்ள ஜேட்ஸ் தேவதாசன் ரத்தினம் பல்கலைப் பண்பாட்டு நிறுவனத்தின் கலாசார நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவரான திரு. வி. சிவசாமி இவ்வாறு கூறினர்.

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் இயக்குனரான பேராசிரியர் சிவ. பத்மநாதன் ஒழுங்குபடுத்திய இக்கலாசார நிகழ்ச்சியில் ஈழத்துப் பிரபல கர்நாடகஇசைக் கலைஞர்களில் ஒருவரும், இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் சிரேஷ்ட இசைஆசிரியர்களில் ஒருவருமாகிய சங்கீதவித்துவான் திரு ஏ. கே. கருணா[illegible] செய்தார்.

அவருக்குப் பக்கவாத்தியங்களாக திரு. சிதம்பாநாதன் மிருதங்கமும் திரு சி. கண்ணன் வயலினும் வாசித்தார்கள், (க),

## ஜூரரின்றி விசாரணை

நாடாளுமன்றக் கிரனேட் தாக்குதல் வழக்கு ஜூரர்கள் இல்லாமல் விசாரிக்கப்படவுள்ளது

இந்த ட்ரயல் - அற் - பார் விசாரணையை நடத்த மூன்றுமேல் நீதிமன்று நீதிபதிகளைப் பிரதம நீதியரசர் பரிந்தாரணசிங்கா நியமித்திருக்கிறர். (உ-எ)

## ப. நோ. கூ. ச. ஊழியர்

பண்டத்தரிப்பு, ஜன, 29

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தமக்குரிய வாழ்க்கைப்படி ரூபா 260ஐ, 1. 3. 89 இல் இருந்து வழங்க வேண்டும் என்றும் அல்லது தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க நேரிடும் என்றும் இயக்குனர் சபைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

St. Jude Novena

May the most Sacred Heart of Jesus be praised, loved, adored and glorified throughout the whole world now and forever. Sacred Heart of Jesus have mercy St. Jude, helper of the helpless pray for us.

Say this prayer 9 times a day, by the 8th day your prayers will be answered Say it for 9 days and it has never been known to fail.

(8904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகும் கல்விப் பிரச்சினைகள்

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர் காலம் வீணாகிறது!

## இடைநடுவில் படிப்பை நிறுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

''எமது பாடசாலைகளிலிருந்து வருடாவருடம் மாணவர்கள் 'இடைவிலகுதலும் விடுபடுதலும்'' அரசாங்கத்துக்கும் கல்வியில் அக்கறையுள்ளவர்களுக்கும் விசனத்தை ஏற்படுத்தி வருகிறது. எமது மாணவர்கள் படிப்பை இடைநிறுத்துவதற்குக் காரணம் மேலெழுந்தவாரியாகப் பொருளாதார நலிவு எனக் கூறப்பட்டாலும் அதுதான் முற்று முழுதான காரணம் எனக் கொள்ள முடியாது.

பிள்ளைகளின் படிப்பில் பெற்றோரின் கவனக்குறைவு திட்டமிடாத கல்வி முறையினால் ஏற்படும் சிக்கல், தங்குதடையில்லாத மாணவர்களின் வகுப்பேற்றம் அதிவரண்ட பிரதேசங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் கரையோரப் பகுதிகளிலும் இருந்து வரும் பயிற்றப்பட்டாத தனி ஆள்பாடசாலை முறை. மூன்றும் கட்டக் கல்வி விருத்தி செய்யப்படாமை, இனக்கலவரங்களினாலும் இராணுவ வன்செயல்களினாலும் மக்கள் குடிபெயர்ந்தமை ஆகியவற்றை மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தம் செய்வதற்குக் காரணிகளாகக் கொள்ளலாம்.

எமது பாடசாலைகளில் முதலாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரை மாணவர்கள் இடைவிலகுவதையும் ஒன்பதாம் வகுப்புக்கு மேல் மாணவர்கள் படிப்பைக் கைவிடுவதையும் காணக்கூடியதாயிருக்கிறது.

### அதிபர ஆசிரியர் பொறுப்பின்மை

முன்னைய காலத்தில் எமது நாட்டில் ஆசிரியர்களின் நியமனம் ஒரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டிருந்தது மாணவர்கள் பாடசாலைக்கு வராதிருந்தால் அல்லது இடைவிலகினால் மாணவர் வரவு சராசரி வீழ்ச்சியடையும் இதனால் கடைசியாகச் சேர்ந்த ஆசிரியர் வீடு செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியது அதைத் தடுப்பதற்கு பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கூட்டாக முயற்சி எடுத்தனர். இப்பொழுது மாணவர் பாடசாலையை விட்டு விலகினால் அதற்குப் பரிகாரம் தேட அதிபரோ ஆசிரியர்களோ அக்கறை கொள்வதில்லை.

### வகுப்பேற்றம்

தங்குதடையிலலாமல் மாணவர்களை வகுப்பேற்றம் செய்வதால் க.பொ.த (சாதார ணம் வகுப்பை அடையும் சில மாணவர்கள் தாம் அடைய விரும்பும் பெறுபேறுகளை அடையாமல் விடுகின்றார்கள். இதனால் விரக்தி கொண்டு படிப்பைக் கைவிடுபவர்களும் உளர்

பொதுவாக 16 வயதடைந்த மாணவ மாணவிகள் குறைந்த சம்பளத்துடன் கூடிய வேலையைக் கண்டெடுக்கும் நோக்கம் கொண்ட சில முதலாளிகளின் வலையில் சிக்கி விடுவதால் தமது படிப்பை இடைநிறுத்தம் செய்து விடுகின்றனர். இது கூடுதலாகக் கரையோரப் பகுதிகளிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் நடைபெறுகிறது. இதைத் தடுப்பதற்கு தொழில் சட்டத்தை தீவிரமான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

> அண்மையில் நடைபெற்ற அமரர் மு. கார்த்திகேசன் நினைவுச் சொற்பொழிவின் தொகுப்பாகும் இந்தக் கட்டுரை.
>
> சொற்பொழிவை ஆற்றியவர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை
>
> தொகுப்பு
> கதிரோன்

### தவறான கருத்து

ஒரு நாட்டின் விவசாயம் விருத்தியடைந்தால் கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனச் சிலர் கருதுகிறார்கள். இது ஒரு தவறான கருத்து. உலகில் எந்த ஒரு நாடும் தங்கள் வேலைப் படையின் உயர்வான விகிதத்தை விவசாயத்தில் ஈடுபடுத்தி உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறறதில்லை வளர்ச்சியைப் பெற்றதயும் இல்லை. கிழக்கிலா, மேற்கிலோ உள்ள வளர்ச்சி அடைந்த நாடுகளில் குறைந்த விதத்தினரே விவசாயத்தில ஈடுபட்டுக்கொண்டு வளர்ச்சி அடைந்த பொருளாதாரதலைத் கொண்டனவாய் இருக்கின்றனர்

விவசாய நாடு ஒன்றில் அந்த நாட்டின் தேசிய வருமானம் உயர்வடையுமே அன்றி கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத் தராது. இதனால் இளைஞர்கள் தாம் விரும்பும் தொழில்களைப் பெற முடியாமல் விரக்தி அடைகின்றனர்.

ஜேர்மனி போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் ஐந்து சதவீதத்திலரே இலாபகரமான முறையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐம்பது சதவீதத்தினர் மூன்றாந்தர தொழில்கள் எனப்படும் வங்கிகள், கல்வி நிலயங்கள், விளையாட்டுத் துறை, மக்களுக்குக் களிப்பூட்டும் துறைகள், ஹோட்டல்கள், காப்புறுதி, பிரயாண ஏஜென்சி போன்ற பகுதிகளில் வேலை பெறுகின்றனர்.

### படிப்பைக் கைவிடுவோர்

எமது நாட்டில் படிப்பைக் கைவிடுவோரின் பிரச்சினை பெற்றோர்களுக்கு மட்டுமல்ல, பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் விசனத்தை ஏற்படுத்தி வருகிறது. எமது பல்கலைக்கழகங்களில் கலைப்பகுதியில் படிக்கும் மாணவர்கள் தான் தமது படிப்பை முடித்துக் கொள்ளாமல் வெளியேறுகின்றனர் எனப் பலர் நினைக்கலாம். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் மாணவர்கள் கூட பட்டப் படிப்பை பூர்த்தி செய்யாமல் வெளியேறுவதைக் காணக்கூடியதாயிருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மாணவர்களில் அநேகர் பட்டப்படிப்பை முடித்துக் கொள்ளாமல் வெளியேறுகின்றனர். இதற்கான காரணிகளை ஆராய்ந்து அறிவது நல்லது

### கால இடைவெளியும் தாபதமும்

எமது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழைய பரீட்சைகளில் தேர்வு பெறவும் நெடுங்காலம் எடுக்கிறது: 1985 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறறவர்கள் இன்னும் பல்கலைக்கழக முதலாவது ஆண்டைத் தாண்டவில்லை 1986 ஆம் ஆண்டுப் பரீட்சையில் அனுமதி பெற்றவர்கள் கலைப்பீடத்தைப தவிர மற்றைய பீடங்களுக்கு அனுமதி பெற்றவாகள் இன்னும் பல்கலைக்கழகத்துக்குள் நுழையவில்லை 1987 ஆம ஆண்டுப் பரீட்சையின அடிப்படையில் அனுமதி பெற்றவர்கள் இப்பொழுது ஆங்கிலம் கற்றுக்கொண்டிருக்கின்றனர். 1986 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்தவர்கள் தேர்வு முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இங்கிலாந்தில் ஆவணி மாதத்தில் பல்கலைக்கழக உட்புகு பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் ஐப்பசி மாதத்தில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுவிடுகிறான்.

### பல்கலைப் படிப்பு விரிவடையாமை

இலங்கையில் பல்கலைக்கழகப் படிப்பு விரிவடையாமல் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்றே கூறலாம். பல்கலைப் படிப்பு விரிவடையாமையை விட்டு இரு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு சாரர் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் தாராள கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். இன்னுமொரு சாரார் நாட்டின் தொழில வளர்த்துக்கமையவே பட்டதாரிகள் உருவாக்கப்பட வேண்டுமெனக் கருதுகின்றனர்.

இன்று இந்தியாவில் 105 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன இப்பல்கலைக்கழகங்களோடு பற்பல பட்டப் படிப்புக் கல்லூரிகள் இணைக்கப் பட்டுள்ளன. அவற்றைவிட, சகல அதிகாரங்களையும் கொண்ட பட்டப் படிப்புக் கல்லூரிகளும் இயங்குகின்றன இக்கல்லூரிகள் தாமே பரீட்சைகளை வைத்து பட்டங்களையும் 'டிப்புளோமா'க்களையும் வழங்குகின்றன. எமது நாட்டில் பல்கலைக்கழகப் படிப்பு விரிவடையாதலால் மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில கடும்கட்டுப்பாடுகள் கையாளப்படுகின்றன.

சென்ற ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு அனுமதிகோரும் பரீட்சைக்கு ஒரு லட்சத்துநூற்பதாயிரம் மாணவர்கள் தோற்றினர். இவர்களில் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றோர் எண்ணிக்கை 30,000 ஆகும். இறுதியாகப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டோர் 6 200 ஆகும். 1965 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யபபட்டோர் 5,000 மாணவர்களாவர். 1987 இல் அதாவது 22 ஆண்டுகளுக்குப் பின்பும் 1 200 மாணவர்களை மட்டுமே கூடுதலாக அனுமதித்துள்ளோம்.

அபிவிருத்தியடைந்த நாடான ஐக்கிய அமெரிக்காவில் 18 வயதடைந்தவர்களில் 40 சதவீதமானோரும் பிரான்சில் 30 சதவீதத்தினரும் ஜப்பானில் 85 சதவீதத்தினரும் பல்கலைக் கழகம் புகுந்துள்ளனர். ஆனால் இலங்கையில் இவ்வயதில் ஒருவருமே பல்கலைக்கழகம் புகவில்லை.

### கல்விக் கல்லூரிகள்

எமது நாட்டில் கல்விக் கல்லூரிகள் (கலாசாலைகள்) ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் சிறந்த பங்கினை வகிக்கின்றன. எமது அரசாங்கம் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் எட்டுக் கலாசாலைகளைத் திறந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு கலாசாலையைத் திறக்கும்படி இதுவரை எவரும் கேட்கவில்லை.

இக்கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களே வருங்காலத்தில் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுவர். இந்த ஏற்பாடு மாகாணசபைகள் சரியாக இயங்கத் தொடங்கியதும் அமுல் படுத்தப்படும். ஆகவே தமிழ்ப் பிரதேசத்தில் கல்விக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுவது மிக மிக அவசியமாகும்.

★

## பத்திரிகையாளனாகவும் பொதுஜன ஊழியனாகவும் வாழ்ந்த பெரி. சண்முகநாதன்

> பத்திரிகையாளனாகவும் பொதுஜன ஊழியனாகவும் வாழ்ந்து மறைந்த எழுத்தாளர் பெரி. சண்முகநாதனின் முதலாவது ஆண்டு நினைவு தினம் கடந்த 24 ஆம் திகதி ஆகும். அதனை முன்விட்டு இது பிரசுரமாகிறது.

'சோவியத் நாடு' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் சிறப்பான பணி புரிந்த 'பெரி' சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும், விமர்சகராகவும், கட்டுரையாளராகவும், கவிஞனாகவும் திகழ்ந்தார்.

அவர் பல போட்டிகளில் பரிசுகளையும் பாராட்டுப் பத்திரங்களையும்பெற்றார். 'அன்புள்ள அம்மாவுக்கு...'' என்ற இவரது கவிதைத் தொகுப்பு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.

ஈழநாடு, முரசொலி ஆகிய பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த நண்பன் பெரி.சண்முகநாதன்எழுதிய விமர்சனங்களும், அரசியல் கட்டுரைகளும் வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றன.

சஞதன், செல்லக்கிளி, கௌரி, பெரி 'பெ.ச' என்ற புனை பெயர்களுக்குள் மறைந்து நின்று எழுதிப்போதிலும் அவரின் எழுத்துக்களே பெரியை வாசகர்களுக்குக் காட்டிக் கொடுத்ததுண்டு

வீரகேசரியில் 'குருபார்வையில்' என்று பெரி எழுதிய நாளாந்த முக்கிய சம்பவங்கள் பெரியியின் எழுத்தாற்றலுக்கும் 'பெரிஸ்கோப்' என்ற தலைப்பில் ஈழநாடு பத்திரிகையில் எழுதியவை 'பெரி'யின் அரசியல் ஞானத்திற்கும் நல்ல அளவு மானிகளாகும்.

ஏழைகளின் உற்ற நண்பனாகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் விசுவாசியாகவும். உரிமை சோரும் மக்களின் உபதேசியாகவும் வாழ்ந்த பெரியதம்பி சண்முகநாதன் 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி திடீரென மரணமான செய்திகேட்டு பத்திரிகையுலகம் அதிர்ச்சியடைந்து கண்ணீர் விட்டழுதது.

கொஞ்சமும் வஞ்சமில்லா நெஞ்சுரமிக்க நல்ல நண்டன் பெரியின் சாதனைகள் சோதனைக்குள்ளாகி நிற்கும் இளைய தலைமுறைக்கு நல்ல போதையூட்டும் பெரியின் ஆக்க இலக்கியங்கள் அழியாதவை, அவை 'பெரி'யை மறையவிடாது நினைவூட்டும் ஆம்! 'பெரி' இறக்கவில்லை. அவன் எழுத்துக்குள் எழுத்தாகி நிற்கிறான்.

– ஜனனி

### மகாவித்தியாலயம் கையளிப்பு

மாங்குளம், ஜன 29

கடந்த இருபத்தைந்து மாதங்களுக்கு மேலாக இராணுவ முகாமாக இருந்த புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் மீண்டும் முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளரிடம் இராணுவ அதிகாரிகளினால் கையளிக்கப்பட்டுள்ளது (ச-94)

### நிவாரணக் கொடுப்பனவு

மாங்குளம், ஜன 29

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சிவபுரம், புத்துவெட்டுவான், ஐயாகபுரம் மேற்கு கிராமசேவகர் பிரிவில் மீளக்குடியமர்வுக்கான நிவாரணப்பணம் 600 பேருக்கு அடுத்த மாதம் 4 ஆம் திகதியிலும் துணுக்காய் தென்னியன்குளம் விநாயகபுரம். அம்பலப் பெருமான் குளம் கிராம சேவகர் பிரிவில் 500 பேருக்கும் 5 ஆம் திகதியிலும் வழங்கப்பட்டவுள்ளது

இக் கொடுப்பனவுகள் மாங்குளம் மக்கள் வங்கி மூலம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-94)

## வாசகர் திருமுகம்

### கலட்டிச்சந்தி மீன்சந்தையா?

கொக்குவில் கலட்டிச் சந்தியில் காலை பத்து மணி அளவில் தொடங்கி ஒரு மணிவரை நடைபெறும் மீன் சந்தையினால் இப்பகுதியால் சென்று வரும் பல்கலைக்கழக மாணவ மாணவிகளும் பல் தொழில் நுட்பக்கல்லூரி மாணவ மாணவிகளும் மற்றும் பிறவுன் வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர். வாகனங்களும் இடைஞ்சலை எதிர்நோக்கவேண்டியுள்ளது

வீதியின் இருபக்கங்களும் சைக்கிள்களில் நின்றபடியே வியாபாரிகள் மீன் விற்பதும், அதனை வாங்க பெருமளவு மக்கள் கூடுவதுமே இந்நெருக்கடிக்குக் காரணமாகும்:

இம் மீன் விற்பனவு நடைபெறும் இடத்திற்கருகில் இரண்டு சிறிய சைவ ஆலயங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது

போக்குவரத்து இடைஞ்சலை நிவர்த்தி செய்ய கொக்குவில் புகையிரத நிலயத்திற்கு முன்பாகவுள்ள பரந்த இடத்தை மீன் சந்தைக்காகப் பயன்படுத்தலாம்.

கொக்குவில். எஸ். செல்வராசா

★ ★ ★

### அந்தோ! முருங்கன் தெரு!

இன்றைய காலத்தில் மனிதனுக்குத் தெருப் போக்குவரத்து இன்றியமையாத ஒன்றாகும். தெருப் போக்குவரத்திற்கு உறுதுணையாக நிற்பவை தெருக்களே. ஆனால் இன்று தெருக்களின் நிலைதான் என்ன? மோசத்திலும் மோசம்.

இதே நிலையில்தான் முருங்கனிலிருந்து சிலாவத்துறை நோக்கிச் செல்லுந் தெரு உள்ளது. இத்தெரு வாகனப் போக்குவரத்தும் நடமாட்டமும் நிறைந்த இடமாயிருந்தும், இன்றுவரை இது சீராகப் புனரமைக்காது பள்ளங்களும் குழிகளுமான நிலையிலுள்ளது.

இதனால் இவ்வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர். இது உண்மையிலே வருந்தத்தக்கது ஒன்றாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இனியாவது கடமையில் குதிப்பார்களா?

முருங்கன். முருங்கனூர் இளங்கிரன்

★ ★ ★

### ஏன் இந்தப் புறக்கணிப்பு?

கல்விதான் தமிழர்களின் உடைமை, அதைக் காப்பது எம் கடமை என்று பேசும் கல்வி அதிகாரிகள் நகரப்புறப் பாடசாலைகளையும் பெரிய கல்லூரிகளையும் உயர்த்த வேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

நாட்டுப்புறச் சிறு பாடசாலைகளையும் அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகளையும் பற்றி அவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை

உரும்பிராய் கிராமத்தை எடுத்துக்கொள்வோம் இங்கே றோமன் கத்தோலிக்க பாடசாலை ஒன்று இருக்கிறது. அரசாங்கம் பொறுப்பேற்க முன் அது ஓர் உயர்தர பாடசாலையாக இருந்தது. பின் ஒன்றிணைப்பு என்ற பெயரில் அதன் தரம் குறைக்கப்பட்டு இன்று 5 ஆம் ஆண்டுவரையே வகுப்புகள் நடைபெறுகின்றன

இருந்தும் இங்கே 340 பிள்ளைகள்வரை கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பிள்ளைகள் உள்ள ஓர் பாடசாலையில் அதிபர், உபஅதிபர், ஆங்கில ஆசிரியர் உட்பட 15 ஆசிரியர்கள் தேவை. ஆனால் இங்கே கடமைபுரிவது 3 ஆசிரியர்கள் மட்டுமே இம்மாதம் 30 ஆம் திகதியுடன் ஒருவர் ஓய்வு பெறுகிறார். எனவே மாசி 1 ஆம் திகதியிலிருந்து 2 ஆகக் குறையப்போகிறது

அதிகாரிகளிடம் முறையிட்ட போது ஆசிரியர்கள் விரும்பிக் கேட்டால் தானே ஆசிரியரைத் தர முடியுமென்று கூறுகிறார்கள்.

அவ்வாறு ஆசிரியர்கள் விரும்பாமைக்கும் முக்கிய காரணம் உண்டு. முதலாவது இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கத்தோலிக்க சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல பின்தங்கிய சமுதாய மாணவர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஆவர்.

இங்குள்ள மாணவர்கள் தமிழ்ப் பிள்ளைகள் இல்லையா? இவர்களுக்கு கல்வி உடைமை இல்லையா? இவர்கள் அனாதைகளா? இன்றைய காலகட்டத்தில்கூட இவ்வளவு புறக்கணிப்பா?

கல்வி அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

உரும்பராய் கிழக்கு, சா. சிங்கராசா.
உரும்பராய்.

## மீளக் குடியமர்த்துவதற்கு புதிய செயற்திட்டம்

கொழும்பு, ஜன. 29

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து வன்செயல்களால் இடம்பெயர்ந்தவர்களையும், அகதிகளாக இருப்போரையும் மீளக்குடியமர்த்துவதற்கான செயற்திட்டம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண அரசு ஆரம்பித்துள்ளது.

இத்தகவலை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார் என இந்திய வானொலி அறிவித்தது.

இத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு அகதி முகாம்களில் உள்ளவர்கள் செம்மலை மற்றும் இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

இவர்களுக்கு வீடு கட்டவும் வருமானம் தரும் தொழிலை ஆரம்பிக்கவும் நிதி உதவியை மாகாண அரசு வழங்கும் என்றும் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார். (உ-எ)

## அடிமை நிலையை ஏற்படுத்தும் போதைப்பொருள்

மனிதனுள் உட்கொள்ளப்படும் போது அவனது உடலில், மனத்தில, நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இராசாயனப் பொருள்களே போதைப் பொருளாகும்.

கஞ்சா, ஹஷிஸ், அபின, ஹெரோய்ன், மோர்பின், அம்பற்றமீன்கள், தூக்க மாத்திரைகள், கொக்கெயின், எல். எஸ். டி, மதுபானம், புகையிலை போன்றவை போதைப் பொருள்களாகும்.

இவை மனிதனுக்கு வேறுபடும் அளவுகளில் அடிமை நிலையை ஏற்படுத்தவல்லன.

இப்பொருள்களைப் பாவிக்கும் மனிதன் நாளடைவில் அவற்றில் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் தங்கி நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றான்.

### போதைப் பொருள்களால் ஏற்படும் பிரச்சினைகள்

- ★ போதை நிலையில் விபத்து ஏற்படலாம்.
- ★ மிதமிஞ்சிய அளவு உபயோகம் மனோவியாதி, வலிப்பு, அறிவற்ற நிலை, மரணம் ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.
- ★ சில சுவாசத்தை நிறுத்தவல்லன.
- ★ குழப்பமான மனநிலை, பயங்கரமாயக் காட்சிகள் உண்டாகலாம்.
- ★ உளவியற் கோளாறுகள் பல ஏற்படலாம்.
- ★ தொடர்ச்சியாகப் பாவிப்பவர்களுக்கு நாளடைவில் அவற்றிலேயே தங்கி இருக்கும் நிலையும் அவற்றிற்கு அடிமையாகும் நிலையும் ஏற்படும்
- ★ ஊசி மூலம் உட்செலுத்தும் போது கிருமி நீக்கப்படாத உபகரணங்கள் பாவிக்கப் படுவதால் புண், சீழ்க்கட்டி, குருதி நஞ்சேறல், செங்க... [illegible] ஏற்படுத்தலாம்.

போதைப் பொருள் பாவிப்பதனால் குடும்பம், சமூகம், நாடு போன்ற அனைத்துமே பாதிக்கப்படுகின்றன உலக நாடுகள் பலவற்றில் சுதந்திரப் 'போராட்ட உணர்வை' மழுங்கடிக்க இப்பொருள்கள் எதிர்ப்பாளர்களால் புகுத்தப்படுவது வழமை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(டாக்டர் க. சுகுமார் எழுதிய ''போதைப் [illegible]'' என்ற [illegible] எடுக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய தொழில் ஆரம்பம்

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. வே. பொன்னம்பலத்தின் துரித முயற்சியினால் மீளக் குடியமர்தல் தொடர்பான பொருளாதாரக் கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கால்நடை, சுயதொழில், விவசாயம் போன்றவற்றை ஆரம்பித்துள்ளனர். (ச-94

# பாடசாலைகளில் மீண்டும் இரண்டு நேர வகுப்புகள்

## ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன 29

பாடசாலைகளில் இரண்டு நேர [Double Session] வகுப்புகளை நடத்துவது குறித்து தீவிரமாக ஆராயும்படி ஜனாதிபதி பிரேமதாஸவை அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக சங்கச் செயலாளர் ஜோசப் ஏ. கஜநாயக்கா ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்.

கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:

1971இன் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு முன்னர் பாடசாலைகளில் இரு நேரவகுப்புக்கள் நடந்து வந்தன. 1971 இன் பின்னரே அவை ரத்துச் செய்யப்பட்டன.

மாணவரின் கல்வி வளர்ச்சி மற்றும் சுகாதாரம் கருதி மீண்டும் இருநேர வகுப்புக்களை காலை 8 மணி அல்லது 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை, நடத்துவது பற்றி அரசு தீவிரமாகச் சிந்தனை செய்யவேண்டும் நண்பகல் உணவுக்கு ஒரு மணித்தியாலம் இடைவேளை விடலாம்.

மேலும் அமைச்சர்களையும் அரசுத் தலைவர்களையும் வரவேற்க மாணவரை வீதிகளில் வரிசையாக நிறுத்தி வைக்கும் முறைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

—இப்படி கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. [உ-எ]

# இறை அருளைப் பெற தூயவழிபாடு வேண்டும்

## திவ்யஜீவன சங்க ஆண்டுவிழாவில்உரை

சாவகச்சேரி, ஜன 29

அமைதி என்பது உள்ளேதான் இருக்கிறதுஅது

பணம், பதவி, பட்டங்களால் கிடைப்பதல்ல.

உள்ளே உள்ள ஒரு பொருளை வெளியில் தேடுவதால் அமைதி ஏற்படாது.

இறை நம்பிக்கையுடன் இடைவிடாத தூய வழிபாடு தியானம் ஆகியவற்றின் மூலமே நாம் இறை அருளைப் பெற முடியும்.

இவ்வாறு ஆத்ம ஜோதி நா. முத்தையா சாவகச்சேரி திவ்யஜீவன சங்க ஆண்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

சாவகச்சேரி நீதிபதி திரு எம். திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: பொய்யினாலும் புரட்டுக்களினாலும் மனிதன் உண்மைப் பொருளை அறிந்துவிட முடியாது. அமைதியையும் பெற்றுவிடமுடியாது.

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக வேண்டும்'' என்று மணிவாசகர் கூறுகின்றார்.

மன அமைதியைப் பெற திருமுறைகளை சீராக ஓதுவது சிறந்த ஒரு சாதனமாகும்.

அதை நாம் எமது பயிற்சியில் கொண்டு வர வேண்டும்'' இப்படி அவர் கூறினார். (ச-31)

## இன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன 29

திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் முதுகலைமாணிப்பட்டம் பெற்றமையைப் பாராட்டும் முகமாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்சங்கம் நிகழ்த்தும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாப் பிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொள்ளுவார்.

இரண்டு பிரிவுகளாக நடைபெறும் இந்த விழாவில் காலை நிகழ்ச்சிகள் 9 மணிக்கும் மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகும் [ஒ 5]

## முதலாவது நினைவஞ்சலி



அமரர்
சுப்பிரமணியம் முருகவேள்
B. A: (Cey) S. L A. S
(மேலதிக அரச அதிபர் [காணி] கிளிநொச்சி)

| பூவுலகில்: | வானுலகில்: |
|---|---|
| 03-05-1938 | 11-02-1988 |

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் இதயத்தால் நாங்கள் உங்களை என்றென்றும் மறவோம்.

எம் குடும்பத்தின் குலவிளக்கே!

உங்களின் ஆத்ம சாந்திக்காக எமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.

சாவகச்சேரி. (9300)


# ★ BECON ★

156/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 89** மீட்டல், வினு - விடை வகுப்புகள்

**பொருளியல்**
**வரதராஜன்**

DAY CLASS
பிரிவு I திங்கள், புதன், வெள்ளி 11.00 — 12.00
பிரிவு II செவ்; புதன்; வெள்ளி 10.00 — 11.00

SAT; SUN CLASS
பிரிவு I 8 00 — 9.00
பிரிவு II 1:00 — 2.00

**வர்த்தகம்**
**ரட்னம்**

DAY CLASS
பிரிவு I திங்; செவ்; வியா; வெள் 10 00 — 11.00
பிரிவு II திங்கள்; புதன்; வெள்ளி 12.00 — 1.00

SAT; SUN CLASS
பிரிவு I 7.00 — 8.00
பிரிவு II 2.00 — 3.00

(C/1575)


## எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் க. தணிகாசலம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 - 06 - 1918 | 29 - 01 - 1981 |

எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்களது மறைவால் வாடிநின்று உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் உங்கள்

மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"தணிகை''
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (9278)


J. M. J.




அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!

உங்கள் பிரயாண ஒழுங்குகளை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வகுத்துத் தருவதில் வல்லவர்கள் என்ற பெயர் பெற்ற

# உங்கள் பயண அமைப்பாளர் எஸ். பி. அன்ரன்

வழங்கும் நற்செய்தி!

★ புதுவருடத்தில் ★

★ கனடா
★ ஜெர்மனி
★ பிரான்ஸ்
★ இத்தாலி
★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் பத்திரமாகவும் நம்பிக்கையாகவும் பயணம் செய்வதற்கு நிச்சயமான பயண ஒழுங்குகளை அமைத்துத் தருகின்றோம்.

# எஸ். பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1383)


## 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மலர்வு:-
30-10-1963



உதிர்வு:-
29-01-1986

## செல்வன் S.உமாகாந்தன் (ராஜா)

அன்பின் மகனே! அருமைச் சகோதரனே!
மன்றாடி வேண்டி நின்றோம்
மறுத்திட்டான் கால தேவன்
சென்றதோ, வருடம் மூன்று
சிலிர்க்குதே, எங்கள் நெஞ்சம்
காடாக இருக்குதப்பா உன் இல்லம்
கை மடங்கி கலங்குகிறான் உன் தந்தை
தேடி அழுகிறாள் உன் அம்மா!
துணையின்றித் தவிக்கின்றான் உன் தம்பி
தேடி அலைகின்றார் உன் சகோதரிகள்
புன் சிரிப்பின் புதல்வனே ராஜா
போன இடம் சொல்லாயோ?
முடிவுறா உன் முழு நினைவோடு கலங்கி வாழும்

அப்பா, அம்மா, அக்காமார்,
தங்கைமார், தம்பிமார், அத்தான்,
மருமகன், அகிலன், உற்றார், உறவினர்.

மானிப்பாய். (8901)


# "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும்

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### ★ சவூதி அரேபியா

| | | | |
|---|---|---|---|
| 1. | கம்பி கட்டுபவர் (Steel Fixer) | — | 700 SR |
| 2. | மேசன் [Mason] | — | 700 SR |
| 3. | ஜெனரேற்றர் எலெக்ரீசியன்ஸ் Generator Electricians (60 Vacancies) | — | 800 SR |
| 4. | ஜெனறேற்றர் மெக்கானிக் Generator Mechanic (60 Vacancies) | — | 800 SR |
| 5. | தச்சுத்தொழிலாளர்கள் (Carpenters) | — | 700 SR |
| 6 | வாடகைக் கார்ச்சாரதிகள் (Taxi Drivers) | — | 800 SR |
| 7. | உள்ளரங்க சுத்திகரிப்பாளர்கள் Indoor Cleaners (50 Vacancies) | | |
| 8. | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் Hospital Cleaners (பெண்கள்) | | |
| 9. | 3 Electrical Engineer | — | 1700 SR |
| 10. | 3 Mechanical Engineer | — | 1700 SR |
| 11. | 2 Exavator Operator | — | 220 USD |
| 12. | 2 Crane Operator | — | 220 USD |
| 13. | 2 Grader Operator | — | 220 USD |
| 14 | 1 Typist (English) | — | 220 USD |

## SHIP VACANCIES

[கப்பல் வேலைவாய்ப்புக்கள்]

| | | | | | Salary |
|---|---|---|---|---|---|
| 1. | Second Engineer | (5 | Vacancies) | — | Open |
| 2. | Rigger | 32 | " | — | " |
| 3. | Cheif mate | 5 | " | — | " |
| 4. | Mechanics (Ship) | 10 | " | — | 400 USD |
| 5. | Able Seamen | 10 | " | — | 300 USD |
| 6 | Cooks | 5 | " | — | 300 USD |

★ புதிதாகக் கடவுச்சீட்டு வேண்டுபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு எடுப்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்

★★★ [BOND] பொண்ட் செய்து கொடுக்கப்படும்.

✶ நம்பிக்கை ✶ நாணயம்

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

# 'M' THREE TRAVEL

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

'இந்திர பவனம்'
சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

இல. 1, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1393)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.

பொருள்:

இகலுக்கு எதிரே சாய்ந்து நடத்தல் ஒருவனுக்கு ஆக்கமாகும்; அதனை எதிர்த்து வெல்லக் கருதினால் கேடு அவனிடம் வரக் கருதும்.


# உதயன்

[illegible]

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
29. 1. 1989 த. பெ. இல52


## இரு இலக்குகளை நோக்கி முத்தரப்பின் முப்பணி

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிலும் மாணவர்களில் 68 சதவீதத்தினர் பல் வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் அதிர்ச்சியும் கவலையும் தருவதாகும்.

இம்மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற சுகாதாரக் கல்வித் திட்டமிடல் கருத்தரங்கு ஒன்றில் இந்தப் புள்ளி விவரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

பல் வியாதி பல நோய்களுக்கு வித்திடுவது. ஆகவே மாணவர்களில் மிக அதிவீதத்தினர் அதனால் பாதிக்கப்பட்டிருப்பது அவர்களின் ஆரோக்கியம் குறித்து விசனமடையும் நிலையை உருவாக்கி உள்ளது.

பல் வியாதி மட்டுமல்ல, பாடசாலை செல்லத் தொடங்கிய சில நாட்களிலேயே, மாணவர்களின் கண் பார்வை குன்றி அவர்கள் மூக்குக் கண்ணாடி அணியும் நிலையும் உண்டு. நாற்பது வயதுக்குப் பின்னர்தான் பார்வை மங்கலாகும் என்ற நிலை இப்போது இல்லை. ஏராளமான மாணவர்கள் எட்டு வயதுக்கும் 14 வயதுக்கும் இடையில் மூக்குக் கண்ணாடி இல்லாமல் வாசிக்க முடியாத நிலையை அவதானிக்க முடிகிறது. கண் வியாதி பற்றிய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களும் தேவை.

இதே போல மற்றும் பலப்பல நோய்களால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மாணவர்கள் சுகநலத்துடன் இருந்து ஆரோக்கியமாக வளர்ந்தால் தான், திடகாத்திரமான எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும்.

மாணவர்கள் கல்வியைக் கிரகித்து அறிவைத் தேடுவதற்கு உடல்நலம் அவசியம். சுவர் இருந்தாலன்றோ சித்திரம் வரைய முடியும்?

மாணவர் உடல் நலன் பேணுதல், அதற்கு உதவியாக சிறுபராயம் தொட்டே அவர்களுக்கு சுகாதார அறிவை ஊட்டுதல் ஆகிய இரண்டும் இரு தனிப்பெரும் பிரதான சமூகக் கடமைகள். அவை இரண்டும் சரிவரத் திட்டமிடப்பட்டு உரிய சிகிச்சை என்ற மூன்றாவது அங்கமும் சேர்ந்தால்தான் உடல்நலமும், கல்வி அறிவும் ஒன்றிலங்கும் எதிர்காலப் பிரசைகளை உருவாக்க முடியும்.

இந்த முப்பெரும் பணிகளையும் செய்யும் பொறுப்பு மூன்று பகுதியினரைச் சார்ந்ததாகும். ஆசிரியர், சுகாதாரத் தொண்டர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களே அந்த முத்தரப்பினரும் ஆவர். முத்தரப்புகளையும் உற்றுப் பார்த்தால் கல்விப்பகுதி, சுகாதாரப் பகுதி, பொதுமக்கள் எனப் பரந்து விரியும்.

மாணவர்களுக்கு சுகாதார அறிவைப் புகட்டுவதில், அதனை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர் பங்கு பிரதானமானது.

மாணவர் உடல்நலம் குன்றாமல் வியாதிகளைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல், நோய்கள் வராமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன டாக்டர்களின், சுகாதாரப் பகுதியினரின் பொறுப்புகளாக, கடமைகளாக, சேவைகளாக அமைதல் அவசியம்.

சுகாதாரப் பழக்க வழக்கங்களையும், நோய் தடுப்பு முறைகளையும் பிள்ளைகள் இளவயதிலிருந்தே கைக்கொள்வதற்குப் பழக்குவது, நோய்வராமல் தடுக்கக்கூடியதான சாப்பாட்டு வழக்கங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவது என்பன பெற்றோரின் பொறுப்புக்கள் ஆகும்.

மொத்தத்தில் மாணவர் உடல்நலம் பேணுதல், கல்வி அறிவை வளர்த்தல் ஆகிய இருமுகப்பட்ட பெரும் நோக்கங்களை ஈடேற்றுவதற்கு முத்தரப்பினரின், முப்பணிகளும் அவசியம். அந்த மூன்று தரப்பினரும் தமக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து, தக்கவாறு ஒருங்கிணைந்து ஒருவருக்கு மற்றவர் உதவி, ஒத்துழைப்பு நல்கி உழைக்க வேண்டும்.

ஆசிரியர்கள், சுகாதார அதிகாரிகள், பெற்றோர்கள் அடிக்கடி தொடர்பு கொண்டு மாணவர் உடல் நலன் பேணும் நடவடிக்கைகளை, ஒழுங்குகளைச் செய்தல் அவசியமாகும்.

முப்பணிகளைச் செய்ய வேண்டிய முத்தரப்பினரில் ஒரு சாரார் சறுக்கினாலும், அக்கறை செலுத்தாவிடினும், எச்சரிக்கையாக இருக்காதிருப்பினும் —

முத்தரப்பினருக்கும் இடையில் தொடர்பும் உறவும், ஒருங்கிணைப்பும் அறுந்து போயினும் —

இரு பிரதான சமூக இலட்சியங்களை, இலக்குகளை அடைய முடியாமல் பின்னடைய நேரிடும்.

இந்தச் சமூகப் பொறுப்பை முத்தரப்பினரும் உணர்ந்து செயற்பட வேண்டும்; வேண்டாத காரணங்களைக் கற்பித்து காலத்தை வீணாக்கி, இளம் செல்வங்களின் எதிர்காலத்தை இருளடையச் செய்யக்கூடாது என வலியுறுத்திக் கூறுகிறோம்.

### கருணாநிதி கலந்து கொள்ளவில்லை

கல்கத்தா, ஜன 28

கல்கத்தாவில் இன்று ஆரம்பமான காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி கலந்துகொள்ளவில்லை.

கேரளா, ஹரியானா, அஸாம், மேற்கு வங்காளம், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். (எ)

### கமிட்டிக் கூட்டம்

ஹராரே, ஜன 28

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை பலப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட கொமன்வெல்த் நாடுகள் அமைப்புக்கமிட்டி வருகிற மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை கூட்டம் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய வெளியுறவு அமைச்சர் ஜோ கிளாக் இக்கமிட்டியின் தலைவர் ஆவார். (எ)

### வட்டமேசை மாநாடு

போலந்து அரசுக்கும் திரு. வால்சே தலைமையிலான சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் இடையேயான வட்டமேசை மாநாடு வருகிற மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. (எ)

### சோவியத் துருப்புக்கள் விலகிய பின்னர்

# கிளர்ச்சிப் படைகளிடம் காபூல் சிக்குமா?

# வெளிநாட்டுராஜதந்திரிகள் வெளியேற்றம்

காபூல் ஜன 28

சோவியத்துருப்புக்கள் முற்றாக வெளியேறஇன்னமும் 20 தினங்கள் உள்ளன.

இந்த நிலையில் காபூலில் உள்ள வெளிநாடுகளின் தூதர்கள், ராஜதந்திரிகள் தூதரகங்களை மூடி விட்டு சொந்த நாடுகளுக்கு திரும்புகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சோவியத் துருப்புக்கள் வெளியேறிய பின்னர் காபூலைக் கைப்பற்ற கிளர்ச்சிக்காரர்களுக்கும் அரசுத் துருப்புக்களுக்குமிடையே கடும் சண்டை ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது காபூல் கடுமையாக பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

அச்சமயம் காபூலில் இருப்பது பாதுகாப்பல்ல என்று கருதியே சகல நாடுகளும் தங்களின் தூதர்களைத் திருப்பி அழைத்து வருகின்றன.

கடைசியாக பிரிட்டனும் பிரான்ஸும் தூதரகங்களை மூடிவிட்டு தாயகம் திரும்பும்படி தங்களுடைய தூதர்களை பணித்துள்ளன.

ஏற்கனவே அமெரிக்காவும் மேற்கு ஜேர்மனியும் தங்களுடைய தூதரகங்களை மூடிவிட்டன.

இதனிடையில் சோவியத் துருப்புக்கள்வாபஸ் ஆவதன் கடைசிக்கட்ட நடவடிக்கைகளைக் கவனிக்க சோவியத் பாதுகாப்பு அமைச்சர் நேற்று காபூல் போய்ச் சேர்ந்தார்.

அங்கு ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லாவுடன் அவர் பேசினார்.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்ட்நாட்ஸே வருகிற 6 ஆம் திகதி இஸ்லாமபாத் சென்று பாகிஸ்தான் அரசுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவார்.

அதே வேளை கெரில்லாக்கள் நேற்றும் காபூல் நகரில் முக்கிய நிலைகள் மீது ஷெல், மற்றும் ரொக்கட் தாக்குதல்களை நடத்தியது;

இந்த நிலையில் சோவியத் படைகள் வெளியேறிய பின்னர், அரசு ஒன்றை அமைக்க கிளர்ச்சிக் குழுக்கள் அனைத்தும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும் என்று ஈரான்வெளியுறவு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

கிளர்ச்சிகுழுக்களில் சில பாகிஸ்தானில்இருந்தும் வேறு சில ஈரானில் இருந்தும் செயற்பட்டு வருகின்றன என்பது தெரிந்ததே. (எ)

### மத்திய கிழக்குப் பிரச்சினை:

## அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு யாஸிர் அரபாத் செய்தி!

மாட்ரிட், ஜன 28

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்குப்படி அமெரிக்காவின் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத்வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ருனிஸியாவில் உள்ள அமெரிக்கத் தூதர்மூலம் தான் ஜனாதிபதி புஷ் உடன் தொடர்புகொண்டிருப்பதாக யாஸிர் அரபாத் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிடில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்க இது தான் தருணம் என்று கூறும் செய்தி ஒன்றை திரு. புஷ்ஷுக்கு அமெரிக்கத் தூதர் மூலம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அரபாத் தெரிவித்தார்.

இதனிடையில் அரபாத் மாட்ரிலில் பிரெஞ்சு, கிரீஸ். ஸ்பெயின் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்தினார். (எ)

### உரிமை கோரல்

ஹொண்டுரஸ், ஜன 28

ஹொண்டுரஸின் முன்னாள் இராணுவத் தளபதி அல்வாரிஸ்மார்டினஸ் நேற்று கொல்லப்பட்டார்.

நிக்கரகுவா அரசு ஆதரவு கெரில்லாக் குழு ஒன்று இக்கொலைக்கு உரிமை கோரியுள்ளது.

### அவசர அழைப்பு

அரபு நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றை அவசரமாக அழைக்கும்படி பலஸ்தீன விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டம் வந்துவிட்டதாக அந்த இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

### விந்தை உலகில்

## 9 வயதில் ஒரு தாய்

புத்தகப் பையைச் சுமக்க வேண்டிய வயதில் ஒரு சிறுமி தன் வயிற்றில் கர்ப்பத்தை சுமந்து கொண்டு திரிகிறாள்.

இந்த அதிசயம் நடந்திருப்பது இங்கு அல்ல. நாகரிகத்துக்கு பெயர் போன அமெரிக்காவில்.

தாயாகப்போகும் சிறுமியின் பெயர் மார்த்தா (வயது 9). வட அமெரிக்காவில் உள்ள கொலம்பியா நகரத்தைச் சேர்ந்தவள். இவளுடைய அப்பா பெயர் அம்புரோசா, அம்மா ஓல்கா.

பிறக்கும்போதே மார்த்தா, 'கொழு கொழு' என்று புஷ்டியாக இருந்தாள்.

'நம் குழந்தை இவ்வளவு அழகா-ஆரோக்கியமாக' இருக்கிறதே!' என்று அவளுடைய பெற்றோர்கள் பெருமைப்பட்டார்கள்.

ஆனால் நிலைமை வேறு விதமாகத் திரும்பியது.

சாதாரணமாகப் பெண்கள் 10 வயதுக்கு மேல் தான் ''பூப்பு'' எய்துவார்கள். ஆனால் மார்த்தா 3 வயதிலேயே 'பெரியமனுஷி' ஆகிவிட்டாள்.

இதைக்கண்டு அவளுடைய பெற்றோர்கள் திகைத்துப்போனார்கள். இதைவிட பெரிய'சமாச்சாரமெல்லாம்' பின்னால் நடக்கப்போகிறது என்று அப்போது அவர்களுக்குத் தெரியாது.

உடனே மார்த்தாவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் ஓடினார்கள். 'ஹார்மோன்கள்' வளர்ச்சியினால் மார்த்தா இத்தனை சிறிய வயதிலேயே 'பூப்புஎய்தி' இருக்கிறாள் இதில் கவலைப்படவோ, பயப்படவோ ஒன்றும் இல்லை. என்று தைரியம் கூறி டாக்டர் அவர்களை அனுப்பி வைத்தார்.

சமீபத்தில் மார்த்தாவின் உடல் வளர்ச்சியில் திடீரென்று சில மாற்றங்கள் ஏற்பட்டன. அவளுடைய வயிறு பெரிதாகிக் கொண்டே வந்தது. முகத்திலும் சில மாற்றங்கள் தெரிந்தன. உடனே பெற்றோர் அவளை மீண்டும் டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனார்கள்.

அங்கு அவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

மார்த்தா கர்ப்பமாக இருக்கிறாள் விரைவில் அவள் தாய் ஆகப் போகிறாள் என்று டாக்டர் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அந்த அதிர்ச்சியில் பெற்றோர்கள் ஆடிப் போய் விட்டனர். அடிப்பாவி? இப்படிச் செய்துவிட்டியாடி என்று மார்த்தாவை அடித்து உதைத்தார்கள்.

சரி... அவள் குழந்தைக்குத் தந்தை யார்?

அதன்பிறகு மார்த்தாவைச் சமாதானப்படுத்தி விசாரித்த போதுதான் குட்டு வெளியானது.

அம்புரோசா - ஓல்கா தம்பதிகளின் சொந்தக்கார வாலிபர் (வயது 18) தான் இதற்குக் காரணம்.

மார்த்தாவைப் போன்று இத்தனை சிறிய வயதில் கர்ப்பிணியான சிறுமி யாரும் கிடையாது.

### மரியாதை சந்திப்பு

பிரதமர் ராஜீவ்காந்தி இன்று (சனி) ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார். 2 மணிநேரம் வரையில் இருவரும் பேசினர். இது ஒரு மரியாதைச் சந்திப்பு என்று சொல்லப்பட்டது. (எ)

# மக்கள் தீர்ப்பின் மகிமையை உணராதவர்களின்

# ஆசைக் கனவுகளைக் கலைக்க விரும்பவில்லை

### வானொலி உரையில் முதலமைச்சர் கருணாநிதி

மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் டாக்டர், கலைஞர் மு. கருணாநிதி மக்களுக்கு நேற்று முன் தினம் இரவு ஆற்றிய வானொலி உரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

நம் சிந்தை, அணு ஒவ்வொன்றிலும் குடியிருக்கும் 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற தமிழர் பேரறிஞர் அண்ணாவின் வழியில் கழக அரசை தமிழக மக்கள் மீண்டும் அமைத்திருக்கிறார்கள்.

உங்களுக்காக உழைப்பதற்கு உத்தரவு தாருங்கள் என்று கேட்டோம் தந்திருக்கிறீர்கள்.

உத்தரவு உங்களுக்கு ஊழியம் செய்வதற்காக, எங்களுக்கு பெருமை தேடிக்கொள்வதற்காக அல்ல! நாடு எனக்கு என்ன செய்தது என்பதற்கு மாறாக நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்ற பொன்மொழிக்கு ஏற்ப பொறுப்புடனும், கடமையுணர்வுடனும் பணியாற்ற எங்கள் ஆட்சி சூளுரைத்து அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பையும் வாழ்த்துக்களையும் கோருகிறது.

தெளிவான தீர்ப்பு

தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே குழப்பமில்லாத ஜனநாயகவாதிகள். அதனால்தான் தெளிவான உத்தரவை தந்திருக்கிறார்கள். வெற்றியான உத்தரவைத் தந்திருக்கிறார்கள். கெட்டிக்காரத்தனமான உத்தரவைத் தந்துஇருக்கிறார்கள். இதுதான் நாம் கேட்டது.

சரியாக 13 ஆண்டுகளுக்கு முன்பு 1976 ஜனவரி இறுதி வாரத்தில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டபோது நாங்கள் அரசு கஜானாவில் விட்டுச்சென்ற கையிருப்புத் தொகை (Cash Balance) 14 கோடி ரூபா. ஆனால் இன்று கோட்டைக்குள் நாங்கள் நுழைகின்ற காலத்தில் அரசு கஜானாவில் 70 கோடி ரூபா குறைகிறது இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை 400 கோடி ரூபாவைத் தொடக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இப்போது நிதி நெருக்கடியுடன் பதவி ஏற்றுள்ளோம். ஒப்புக்கொள்ளப்பட்ட நடப்பு ஆண்டுத் திட்டத்தையே செயற்படுத்த எந்த அளவுக்கு



மு. கருணாநிதி

இயலும் என்ற கேள்விக் குறியோடு தலைமைச் செயலகத்துக்குள் அடியெடுத்து வைத்துள்ளோம்.

அறிவு அலை

இதை எல்லாம் எண்ணித்தான் நிறைவேற்ற முடியாத மத்தாப்புத் திட்டங்களை நாங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லி உங்களை ஏமாற்றநினைக்கவில்லை அதை எல்லாம் தெளிவாகப் புரிந்துகொண்டு நீங்கள் வாக்களித்திருக்கிறீர்கள், அதனால்தான் அரசியல் தெளிவுபெற்ற அறிவு அலை வீசுகிறது என்று தேர்தல் சுற்றுப்பயணத் [illegible] பட்டேன்.

பிறகு இந்த முடிவை விமர்சித்து சிலர் ஏதோ அதுவும் இதுவும் சேர்ந்திருந்தால்...என்றுநடைபெறாத அரசியல் உறவுகளை எண்ணி, வாக்குகளை கூட்டிக்காட்டி உண்மைகளை மறைக்கும் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

கனவுலகில் வாழ்பவர் பற்றி......

இப்படி இருந்திருந்தால், அப்படி இருந்திருந்தால் ...... என்ற கற்பனை உலகத்தில் சஞ்சரிப்போருக்கு நான் சொல்லிக்கொள்வது இந்த உலகமே தோன்றாமல் இருந்திருந்தால் நமக்கு இந்தப் பிரச்சினையே இருந்திருக்காது என்பதுதான்

கிளியோபட்ராவின் மூக்கு கொஞ்சம் சிறிதாக இருந்திருந்தால் அந்தக் கால வரலாறே மாறியிருக்கும் என்பார்கள். உலக வரலாற்றில் இது போன்ற கற்பனைக்கு முடிவே இல்லை.

எனவே இதுபோன்ற வாதங்கள் மக்கள் தீர்ப்பின் மகிமையை உணராதவர்களின் ஆசைக கனவுகளே ஆகும். பரவாயில்லை அவர்களின் கனவைக கலைகக நாம் விரும்பவில்லை;

பிளவு படாத திமுகவுக்கு

ஆனாலொன்று 1975இல் தி.மு.க. பிளவுபடாமல் இருந்திருந்து, இப்போது மூன்று அணிகள் என்ற நிலைமை இல்லாமல், தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அந்த திமுகவுக்கு ஒன்றரைக் கோடி வாக்குகளும் காங்கிரஸுக்கு 47 1/2 லட்சம் வாக்குகளும்தான் கிடைத்திருக்கும், இப்போது விழுந்து உள்ள வாக்குகளின் கணக்கின்படி,

இதிலிருந்தாவது திராவிட இயக்கம் பிளவுபட் [illegible] மையான திராவிட இயக்க [illegible] உணர்ந்தால், சரி.

தமிழ் மக்களாகிய நீங்கள் அளித்து உள்ள பொறுப்பினை நான் நிறைவேற்ற முன்வந்துள்ள இந்த நேரத்தில் சில விபரங்களை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியது எனது கடமையாகும்.

பின்னுக்கு தள்ளப்பட்ட வளர்ச்சிக் கடிகாரம்

கடந்த காலத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக் கடிகாரம் பின்னோக்கித் திருப்பிவைக்கப்பட்டிருக்கிறது. கழக ஆட்சிக்காலத்தில் தொழில் துறையில் இந்தியாவில் 3ஆவது இடத்தில் இருந்த தமிழகம் இப்போது 13 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு வந்திருக்கிறது.

உங்கள் ஒத்துழைப்போடு இதனை மாற்றி அமைப்போம் என்ற உறுதியைத் தருகிறேன்.

9 ஆண்டுகள் ஆளும் கட்சியாக இருந்திருக்கிறோம். அதற்குப்பிறகு 13 ஆண்டுகள் எதிர்கட்சியாக இருந்து பணியாற்றி இருக்கிறோம்.

ஆளுங் கட்சியாக இருந்தபோதும், எதிர்க் கட்சியாக இருந்த போதும், இப்போது, மீண்டும் ஆளும் கட்சியாக இயங்கும் போதும் மக்கள் பணிதான் எங்கள் லட்சியம் என்பதால் ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற இருநிலையும் எங்களுக்குச் சமம்தான்.

நிர்வாகப் படகில் ஏறி..................

வெற்றி கண்டு வெறி கொள்ளமாட்டோம்; தோல்வி கண்டு துவளாமல் எங்கள் பணிகளைத் தொடர்ந்த காரணத்தால்தான் இன்றுவெற்றி கண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடமாட்டோம்.

எனவே வெற்றிக் களிப்பின் வெள்ளத்தில் மிதக்காமல் நிர்வாகப் படகில் ஏறி தூய்மை எனும் துடுப்பு கொண்டு நேர்மையாக, வேகமாகச் செலுத்தி இலட்சியக் குறியை அடைவோம்.

தமிழ்நாடு பின்தங்கி விட்டது வேகமாக ஓடினால்தான் விட்ட இடத்தைப் பிடிக்கமுடியும்; எனினும் அதில் விவேகமும் இருந்தால் தான் தடுமாறாமல் ஓடவும் முடியும்.

எங்களின் அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவு செய்கிற பொறுப்பான அரசாக இருக்கும்

உங்கள் நம்பிக்கையைப் பெறுவதற்கும் பெற்ற நம்பிக்கையை மேலும் பெருக்கிக் கொள்வதற்கும் எங்கள் சிந்தனையையும் செயலையும் பயன்படுத்துவோம்.

தூய்மையான அரசு நடத்துவோம்

சாதாரண மக்களுக்காக மிகச் சாதாரணமான எங்களால் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இந்த ஆட்சி அசாதாரணமான நெருக்கடிகளுக்கு இடையே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை வகுக்கும் பயணத்தைத் தொடங்குகிறோம்.

வேண்டியவர்;வேண்டாதோர்,வாக்களித்தோர்; வாக்களிக்காதோர் நண்பர்கள், உறவினர்கள் என்றுஎல்லாம் ஆட்களை வைத்து பிரச்சினைகளைக் கவனிக்காமல், பிரச்சினைகளின் தன்மைகளை வைத்து உரிய முடிவுகளை மேற்கொள்வது ஒரு தூய்மையான அரசுக்கு உத்தரவாதம் என்பதை உணர்ந்து எங்கள் ஆட்சி உங்கள் வாழ்த்துக்களோடு நடைபெறும் என்று கூறி கடமையினைத் தொடர்கிறேன்.

அண்ணா வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை :-. யாழ்ப்பாணம்.

# உதயன்

29 01 1989 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, · யாழ்ப்பாணம்.

நேற்றைய இரங்கலுரைகளில் ஒலித்தவை:

# பேராசிரியர் வித்தி பூரணமான இலங்கையராகத் திகழ்ந்தவர்

## யாழ். பல்கலைக் கழகத்தில் அவருக்கு நினைவாலயம் வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன 29

பேராசிரியர் வித்தியானந்தனைத் தமிழுக்குள் மட்டும் சிறைப் பிடித்துவிட முடியாது. அவர் பூரணமான இலங்கையராகத் திகழ்ந்தார்.

அவரது வரலாறு முழுமையாக வெளிவரும் பொழுது அந்த வரலாறு அவரை இந்த நாற்றாண்டின் மிகச் சிறந்த தமிழ் அறிஞராக மட்டுமன்றி மிகச் சிறந்த இலங்கையராகவும் காட்டும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பி குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தனின் இறுதிச்சடங்கும், அஞ்சலி நிகழ்ச்சியும் நேற்றுக் காலை தெல்லிப்பழையில் உள்ள பேராசிரியரது இல்லத்தில் நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்ச்சியில் பேராசிரியர் சிவத்தம்பி உரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்வு மொழியின் சின்னமாக அமைந்தது. கல்வி, பண்பாடு, கலை என்பவற்றை மட்டும் கொண்டிராது தமிழ் வளர்ச்சியின் சகல படிகளையும் கொண்டிருந்ததாக அமைந்திருந்தது.

வித்தியின் இரத்தக் குடும்பம் சிறியது. அவரது இதயக் குடும்பம் பெரியது அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி தமிழுக்குச் செலுத்துகின்ற அஞ்சலி; மனிதத்துவத்திற்குச் செலுத்துகின்ற அஞ்சலி — என்று பேராசிரியர் சிவத்தம்பி மேலும் தெரிவித்தார்.

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது இரங்கலுரையில்—

'ஈடு செய்ய முடியாத இந்த இழப்பைத் தாங்க முடியாது சாரிசாரியாகக் கண்ணீர் விட்டு அவரது சேவையை நினைவு கூருகிறோம்.

அவரது நினைவாகத் தெல்லிப்பழையிலும், யாழ் பல்கலைக் கழகத்திலும் நினைவாலயங்கள் அமைக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

ஜனாப் கே எம் எம் ஷமீத் தமது இரங்கலுரையில் கூறியதாவது:-

பேராசிரியர் வித்தியானந்தன் சாதி சமய வேறுபாடின்றிச் சேவையாற்றியவர். இந்த நாட்டின் முஸ்லிம் மக்களின் இலக்கண, இலக்கிய வெளிப்பாடுகளை எதுவித தயக்கமுமின்றி வெளியுலகுக்கு எடுத்துக் காட்டியவர்.

அதனால் தான் இவரது 'கலையும் பண்பும்' என்ற நூல் சாகித்திய மண்டல பரிசுபெற்றது என்று கூறினார்.

தென் இந்தியத் திருச்சபையின் செயற்குழு சார்பில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு ஜெபநேசன் கூறியதாவது:-

1961 ஆம் ஆண்டு கச்சேரிக்கு முன் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது மாணவர்களுடன் ஒன்றிணைந்திருந்து தமிழுணர்வை வளர்த்தவர் பேராசிரியர் வித்தியானந்தனவார். இவர் பாலைவனத்தில் பசும் சோலை போன்றவர்.

தமிழ்மக்களை புதுயுகத்தின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தியவர்கள் அமெரிக்கன் மிஷனரிமார்' என்று துணிந்து கூறியவர்

பேராசிரியர் வித்தி இறந்துவிட்டார்; ஆனால் அவர் பணி முடிந்துவிடவில்லை — என்று கூறினார்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ் ஜோசப் தமதுரையில் கூறியதாவது:-

பேராசிரியர் வித்தி சமுதாய முன்னேற்றத்திலும் தமிழினத்தின் வளர்ச்சியிலும் தளராப்பற்றுக் கொண்டவர். அவரிடம் அனைத்துச் செயற்பாடுகளின் போதும் மனிதத்துவப் பண்பு மேலோங்கி நின்றது. இதனால் தான் இவர் தமது மண்ணில் மதிக்கப்படவில்லை

கிறிஸ்தவக் கலாசார துணைப் பிரிவொன்றை உருவாக்குவதற்கும், கிறிஸ்தவ நாடகப்பிரதிகள் நான்கினை மொழிபெயர்ப்பதற்கும் பெரும் பங்காற்றினார்.

இவரது சேவையை வரலாறு காலம் கடந்து நின்று போற்றும் — என்று கூறினார்.

பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், எழுத்தாளர் பிரதிநிதிகள், கலைஞர்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் இரங்கலுரை நிகழ்த்தினர். இரங்கலுரை நிகழ்த்திய பலரும் பேராசிரியர் வித்தியானந்தனின் சேவைகளைக் குறிப்பிட்டுப் பேசுகையில் சோகம் தாளாமல் நா தளதளக்க அழுதனர் (அ-5)

## காணவில்லை



மகேஸ்வரி

மகேஸ்வரி வயது பன்னிரண்டு) [12] என்பவரை 23-01-89 இல் இருந்து காணவில்லை; கடைசியாக வெள்ளை நிறத்தில் சிவப்புப் புள்ளிகளிட்ட கவுண் அணிந்திருந்தார். தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு:-
S. J. பாலா
மயிலங்காடு,
சுன்னாகம்.

(8908)

## 9 ஆவது வேட்பாளர் நேற்று உயிரிழந்தார்

கொழும்பு, ஜன 29

தீவிரவாதிகளினால் கொல்லப்பட்ட நாடாளுமன்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தது.

நேற்று முன்தினம் இரவு அப்புத்தளையில் வைத்து இரத்தினாயக்கா என்ற சுதந்திரக் கட்சி வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் கொலையுண்ட 9 ஆவது வேட்பாளர் ஆவார். [உ-எ]

## விராஜ் மென்டிஸ் மன்னிப்புக் கோருகிறார்

கொழும்பு, ஜன 29

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் தாம் துன்புறுத்தப்படக் கூடும் என லண்டனில் வைத்து தாம் தெரிவித்ததற்காக விராஜ் மென்டிஸ் மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

திரு. மென்டிஸ் தனது சகோதரர் ஊடாக விடுத்த அறிக்கையில் இத்தகவலை வெளியிட்டார்.

''தவறாகக் கூறியதற்காக தாய் நாட்டிடம் மன்னிப்புக் கோருகின்றேன்:

இலங்கையில் இடம் பெற்ற வன்செயல்களைக் காட்டி பிரிட்டனில் தங்க நான் முயற்சித்தது குறித்து வருந்துகின்றேன்.

இங்கு நடைபெறும் கலவரங்களைக் காட்டி லண்டனில் தங்க முயற்சித்ததினால் நான் என் தாய் நாட்டை நேசிக்கவில்லை என்று கூறிவிட முடியுமா?

நான் தாய்நாட்டை நேசிக்கின்றேன்.—இப்படி அறிக்கையில் திரு. விராஜ் மென்டிஸ் தெரிவித்தார். (உ-எ)

### பிணை மறுப்பு

கொழும்பு, ஜன 29

முன்னாள் ஜனாதிபதியின் மகன் ரவி ஜெயவர்த்தனாவைக் கொலை செய்யச் சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள இருவரையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி வால்டர் வைத்திரத்தின மறுத்துவிட்டார்

டாக்டர் அத்துல சுமதிபால. பொறியியலாளர் ஜயந்த வீரசேகரா ஆகியோர் மீதே மேற்படி குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. [உ-எ]

## போலீஸாருக்கு கத்திக்குத்து

கொழும்பு, ஜன 29

பேராதனைப் பாலத்தைக் காவல் புரிந்து கொண்டிருந்த இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் வானில் வந்தவர்கள் சிலரால் கத்தியால் குத்தப்பட்டனர்.

அந்த இனந்தெரியாத நபர்களிடம் ஆயுதங்கள் சிக்கக்கூடாது என்ற காரணத்தில் சம்பந்தப்பட்ட பொலீஸார் தம்மிடமிருந்த துப்பாக்கிகளை ஆற்றில் வீசி எறிந்தனராம்.

காயமடைந்த பொலீஸார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-எ)

## தேர்தல் ஆட்சேபனை மனு; விசாரணை மார்ச் 13இல்

கொழும்பு, ஜன 29

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பிரதம நீதியரசர் திரு பரிந்த ரணசிங்கா அறிவித்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சமர்ப்பித்த ஆட்சேபனை மனு நேற்று முன்தினம் பிரதம நீதியரசரின் சேம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

திருமதி பண்டாரநாயக்கா சார்பில் ஜனாதிபதி வழக்கறிஞர் எச். எல். டி. சில்வா ஆஜரானார்.

ஜனாதிபதி பிரேமதாஸ சார்பில் ஜனாதிபதி வழக்கறிஞர் கே. என். சொக்ஸி ஆஜரானார்.

தேர்தல் ஆணையாளர் சார்பில் சட்டமா அதிபர் சுனில் டி சில்வா, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலக் மாரபனவுடன் ஆஜரானார். (உ-எ)

## இன்றைய விமர்சன அரங்கு

பருத்தித்துறை, ஜன 29

டாக்டர் எம். கே. முருகானந்தனின் ''தாயாகப் போகும் உங்களுக்கு'' எயிட்ஸ் ஆகிய இரு நூல்களுக்கான விமர்சன அரங்கு மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரிய ஆலோசகர் திரு க கதிரமலை தலைமையில் இன்று காலை 8 30 மணியளவில் நடைபெறும். [இ-118)

## ராஜீவுக்கு கலைஞர் நன்றி தெரிவிப்பு

சென்னை, ஜன 29

பிரதமர் ராஜீவ் காந்தியின் வாழ்த்துச் செய்திக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பி இருக்கிறார்.

பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் —

தமிழக மக்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து உதவும் என்று உறுதியளித்திருந்தார்.

பிரதமரின் இந்த அன்பான உறுதியைத் தாம் பெரிதும் வரவேற்பதாக திரு கருணாநிதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். [உ-எ]

## ஜனாதிபதித் தேர்தலின் பின் 300 க்கும் அதிகமானோர் தெற்கில் படுகொலை!

கொழும்பு ஜன 29

கடந்த டிசம்பர் 18 ஆம் திகதிக்குப் பின்னர் தென்பகுதியில் முன்னூற்றுக்கும் அதிகமானோர் தீவிரவாத வன்செயல்களுக்குப் பலியாகி உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனிடையில் தென் மாகாணத்தில் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக பொலீஸாருடன் சேர்ந்து கூட்டுத் தேடுதலில் ஈடுபடும்படி இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உத்தரவிட்டுள்ளார். (உ-எ)

### ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன 29

களபூமி சனசமூக நிலையத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 30 மணிக்கு சுந்தரமூர்த்தி வித்தியாசாலை உள் அரங்கில் நடைபெறவுள்ளது.

### போட்டி

கோப்பாய் ஜன 29

புத்தூர் கொத்தணியைச் சேர்ந்த வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய இல்லமெய் வல்லுனர் போட்டி 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (க-72)

## தேர்தல் முடிவுகள் குறித்து ராஜீவ்—மூப்பனார் பேச்சு!

புதுடில்லி, ஜன 29

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஜி கே மூப்பனார் நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்

தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவுகள் குறித்து அப்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிவடைந்த பின்னர் பிரதமரை திரு மூப்பனார் சந்தித்துப் பேசியது இதுவே முதல் தடவையாகும். (உ-எ)

### மீன்பிடிக் கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, ஜன 29

மேற்குக் கரைப்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து முற்றாக நீக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது

தடை எதுவுமின்றி இரவும் பகலும் மீனவர்கள் இப்பகுதியில் தொழில் செய்யலாம் என்று வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாள் தெரிவித்தார் என்று இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது [உ-எ]

## ஐ. தே. கவின் கூட்டத்தில் குண்டு வீச்சு!

கொழும்பு, ஜன 29

பலாங்கொடை, கிரிமெற்றியாவ என்னுமிடத்தில் கடந்த வியாழன் நடந்த ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தின் மீது இனந் தெரியாதவர்கள் குண்டுகளை வீசினர்.

அப்போது 22 பேர் காயமடைந்தனர் இவர்களில் 18 பேர் பலாங்கொட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் நால்வரின் நிலை மோசமாகியதால் அவர்கள் இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். [உ-எ]

### கல்வித்துறை மாநாடு

திருகோணமலை, ஜன 29

கல்வித்துறை தொடர்பான விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் முதலாம் இரண்டாம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டில் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வடக்கு கிழக்கு மாகாண கல்வித்துறை அதிகாரிகள் வடக்கு, கிழக்கு கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் பங்குபற்றுவர்.

கல்வித்துறை சம்பந்தமான அதிகாரப் பரவலாக்கல் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### வித்தியின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலத்தில் பங்கு பற்றினர். பிற்பகல் மூன்று மணியளவில் தகனக் கிரியைகள் இடம்பெற்றன.

வித்தியின் புத்திரர்கள் மூவரும் சிதைக்குத் தீமூட்ட, அவரது பூதவுடல் அபிமானிகள் பலரும் தேம்பித் தேம்பி அழ அக்கினியுடன் சங்கமமானது (அ-ஒ)

### ராஜீவுக்கு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக [illegible] எனத் தாக்கி எழுதினார். [உ]

### செவ்வாய்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விண்கப்பல் ஈடுபடும்

போபோஸ் சந்திரனின் அமைப்பு, தன்மைகள் பற்றி விஞ்ஞானிகள் அறிந்து கொள்ளத் தேவையான படங்களை இந்த விண்கப்பல் எடுத்து அனுப்பும்.

இம்முறை சோவியத் விஞ்ஞானிகள் போபோஸ் சந்திரன் பற்றிய மர்மத்தைக் கண்டுபிடிப்பதில் வெற்றி காணுவதற்கு நிறைய வாய்ப்புகள் உண்டு என்று பி. பி. சி. யின் விஞ்ஞான விமர்சகர் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் ஏற்கனவே 12 விண்கப்பல்களை செவ்வாய் மண்டலத்துக்கு அனுப்பியிருந்தது. ஆனால் அவை [illegible] குறிப்பிடத்தக்கது. (உ-எ

### தேர்தலை....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேச பார்வையாளர் குழு ஒன்றை அழைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் யோசனை தெரிவித்திருப்பதாகவும்-

அந்த யோசனை சம்பந்தமாக இன்னும் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தேர்தல் ஆணையாளர் கூறினார். (உ-எ

## மரண அறிவித்தல்கள்

### லிங்கமூர்த்தி கமலாம்பிகை கமலா)

வல்வெட்டித்துறை பாலசிங்கம் லிங்கமூர்த்தியின் அன்பு மனைவியும், வை. ஞானவேலாயுதம், வை யோகானந்தவேல், சி. வள்ளியம்மைப்பிள்ளை, காலஞ்சென்ற வைரமுத்து, சக்திவேலாயுதம், குமரகுரு சிவானந்தவேல், செ. சீதாலக்சுமி ஆகியோரின் சகோதரியுமான கமலாம்பிகை (கமலா) காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு ஊறணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
பா. லிங்கமூர்த்தி,
காணி உத்தியோகத்தர்,
காணி அலுவலகம்,
துணுக்காய்.

''கமலாலயம்''
அ. மி. பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (9127)

### திரு. சின்னர் கந்தையா

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திரு. சின்னர் கந்தையா அவர்கள் சிவபதமெய்திவிட்டார். இவர் புதுக்குடியிருப்பு முன்னாள் பிறப்பு இறப்பு பதிவாளரும், கந்தையா ஸ்ரோர் உரிமையாளருமாவார். இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவசோதி (புதுக்குடியிருப்பு சி சி, த. க. பாடசாலை ஆசிரியர்), சிவபாக்கியம் (புதுக்குடியிருப்பு விவாக பிறப்பு இறப்பு பதிவாளர்), சிவராஜசேகரன் (கந்தையா ஸ்ரோர் உரிமையாளர்), க. சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சி. பூமணி, ச, பாலசிங்கம் (புதுக்குடியிருப்பு ஆனந்தி ஸ்ரோர் உரிமையாளர்) சி. பரமேஸ்வரி, சி திலகவதி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சி. சோமசுந்தரம், சி. தம்பையா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-1-1989-ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
அன்னாரின் அன்பு மனைவி
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் ஆகியோர்.

(8911)

## நன்றி நவிலல்

### கந்தப்பு நாகலிங்கம் அவர்கள்

(முன்னைநாள் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர்)

அன்னாரின் மறைவு கேட்டு உடன் வந்து உற்ற பல உதவிகள் புரிந்தவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வணிக மன்றத்தவர், உள்ளூர் உறவினர்கள் அனுதாபச்செய்திகள் அனுப்பியோர், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியோர் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருமதி ம. நாகலிங்கமும்
குடும்பத்தினரும்

''மனோவாசா''
உரும்பராய். (8913)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [pvt.] Ltd 292/2 Navalar Road, Jaffna. on Sunday 29th January 1989.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org